ISSN 1391-9504

# Vijey விஜய்

07.07.2010 - மலர் 07, இதழ் 18



# உலக சனத்தொகை தினம்


## ஜூலை 11



## மண் வளத்தைப் பாதுகாப்போம்...



## பெற்றோலிய வளம் வந்ததெப்படி?



## நைல் நதிக்கரை நாகரிகம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# பௌத்தர்களுக்கு ஏற்பட்ட தொல்லைகள்

ஜோசப் வாஸ் அடிகளாருக்கு முழுமையான பாதுகாப்பு கண்டி மன்னரால் வழங்கப்பட்டதால் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்ட பொழுதிலும் ஒல்லாந்தரால் அவரைக் கைது செய்யமுடியாமல் போனது. பின்னர் அவர் மேலும் பல குருமார்களை இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டார். அதன்படி, பல கத்தோலிக்க குருமார்கள் இலங்கைக்கு வருகை தந்தனர். அவர்களுக்கும் அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்த கத்தோலிக்கர்களுக்கும் அன்று பிரதான பாதுகாவலனாக கண்டி மன்னனாகிய முதலாம் விமலதர்ம சூரியன் இருந்தான்.

இதற்கிடையில், பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களைப் போலவே நெருக்குதல் கொடுப்பதற்கு ஒல்லாந்தர்கள் தீர்மானித்தனர். அதன்படி, தமது ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் பௌத்தர்கள் தமது மதத்தைக் கைவிட்டு ஒல்லாந்தரின் மதத்தைப் பின்பற்ற வற்புறுத்தும் பல சட்டங்களை அவர்கள் கொண்டு வந்தனர். தமது சமயத்தைப் போதிக்கும் பாடசாலைகளுக்கு பிள்ளைகள் வரவேண்டும் எனக் கட்டளையிட்டனர். ஒல்லாந்த சமய முறைப்படி (ஞானஸ்நானம் பெற்று மதம் மாறி) விவாகம் செய்யும்படியும் ஆணையிட்டனர். அவ்வாறு செய்யாதவர்களுக்கு ஒல்லாந்த ஆட்சியின்கீழ் நிலம் எதுவும் வழங்கக்கூடாது எனவும் தீர்ப்பளித்தனர்.

எனினும், ஒல்லாந்தரின் தேவாலயங்களில் மக்கள் திருமணம் முடித்தல், ஞானஸ்னானம் பெறல், பிறப்பினைப் பதிவு செய்தல் போன்றவற்றைத் தவிர பிறிதொரு செயல்களிலும் ஈடுபடவில்லை. முதலிமார்களும் மற்றும் விதானை போன்ற பதவிகளைப் பெற விரும்பியோரும் இத்தகைய சமய மாற்றம் குறித்துப் பெரிதும் கவலை கொள்ளவில்லை. அதனால், அவர்கள் ஒல்லாந்தர்களின் சமயக் கட்டளைகளைப் பின்பற்றினர். ஏனையோர் தமது மதத்தை தனிப்பட்ட ரீதியில் பின்பற்றினர். இதனால், எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் 1 மாணவர் அனுமதி:

# அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டபோதும் கல்வி அமைச்சு விழிப்புடன்....



பாடசாலைகளில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வது தொடர்பிலான அதிகாரம் அதிபர்களுக்கு வழங்கப் பட்டிருக்கின்றபோதும், அந்நட வடிக்கை முறைப்படியும் நியாய மான வழியிலும் இடம்பெறுகின் றதா? என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு கல்வி அமைச்சு வேலைத்திட்டமொன்றை செயற்படுத்தவுள்ளதாக கல்விச் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

அதன்படி, பாடசாலைகளில் தரம் 1 இல் மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது, மோசடி மற்றும் அதிகார துஷ்பிர யோகங்களில் ஈடுபடும் அதிபர் களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவ டிக்கை எடுக்கப் படும் எனவும் தெரிவிக்கப்படு கின்றது.

எவ்வாறா யினும், தரம் 1 இல் பிள்ளையை அனுமதித்துக்கொள்ள முடியாத நிலையில், மேன்முறையீடுகள் செய்யப்படும்பட்சத்தில் மட்டும் அவற்றை ஆராய்ந்து பார்ப்பதில் கல்வி அமைச்சு தலையிடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரம், எய்ட்ஸ் தடுப்பு தொடர்பான போட்டிகள்

பாடசாலைகளில் சுகாதாரம் மற்றும் எய்ட்ஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான வேலைத்திட்ட மொன்றை நடைமுறைப்படுத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய; பாடசாலை, கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் அறிவுக்களஞ்சியப் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த போட்டிகளில் வெற்றி பெறுவோர் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பினைப் பெறுவர் என்றும் தெரிவிக்கப்படு கின்றது.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

## தரம் 1 இற்கு அனுமதி பெறுபவர்களின் இறுதிப் பெயர்ப்பட்டியல் டிசம்பரில்



2011 ஆம் ஆண்டில் தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற் கான நேர்முகப் பரீட்சை செப்டெம்பர் மாதம் 15 திகதிக்கு முன்னர் நடாத்தப் படவுள்ளதாகவும் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் தற்காலிக பெயர்ப்பட்டியல் செப்டெம்பர் 30 ஆம் திகதி வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த முறைப்பாடுகள் ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்படவுள்ள தாகவும் அவற்றை ஆராயும் நடவடிக்கைகள் ஒக்டோபர் 25- நொவெம்பர் 20 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட நாட்களில் நடைபெறவுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

தரம் 1 இற்கு மாணவர் களை அனுமதித்துக்கொள்வ தற்கான சகல நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், டிசம்பர் 1 ஆம் திகதியில் இறுதிப் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## உ/தரம், தரம் 5 பரீட்சைகள்:

# கடந்த காலத்தைவிட இவ்வருடம் தோற்றுவோரின் எண்ணிக்கையில் உயர்வு

**இவ்வருடம் நடை பெறவுள்ள க.பொ.த உ/தரப் பரீட்சை, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்ற வுள்ள பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை, கடந்த காலத்தை விட அதிகரித்துள்ளதாக பரீட் சைகள் திணைக்களம் அறிவித் துள்ளது.**

**அதன்படி, 2009 ஆம் ஆண்டில் க.பொ.த உ/தரப் பரீட்சைக்கு பாடசாலை பரீட்சார்த்திகள் *சுமார் 1,99,000* பேர் தோற்றி இருந்ததாகவும் இம் முறை அத்தொகை *15,000* ஆல் அதிகரித் திருப்பதாகவும் தெரி விக்கப்படுகின்றது. அத்துடன், தனிப் பட்ட பரீட்சார்த்தி களின் தொகை கடந்த காலத்தில் இருந்ததை விட *6,500* ஆல் அதிகரித்திருக்கின்றது.**

**அவ்வாறே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட் சைக்கு *2009* ஆம் ஆண்டில் *2,95,000* பேர் தோற்றியிருந்த னர். இம்முறை அது *24,000* ஆல் அதிகரித் துள்ளது என்றும் தெரி விக்கப்படுகின்றது.**



## உயர் தரப் பரீட்சை ஓக: 9-செப்: 3 வரை




இவ்வாண்டின் க.பொ.த உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 09ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் மாதம் 03 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கான பரீட்சை அனுமதிப்பத்திரம் மற்றும் நேர அட்டவணை போன்றவற்றை சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, இப்பரீட்சைக்கு பாடசாலை மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் என சுமார் 2,50,000 பேர் தோற்றவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

60 நாட்களில் ஆங்கிலத்தை கற்றுக் கொள்ளுங்கள்
இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழிகாட்டி
E.L.I யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC / SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்தே தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத.வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது. (வயது கட்டுப்பாடு தேவையில்லை)
60 நாட்கள் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.
இலவச T.Shirt ஒன்றும் Phone Sim English Book என்பன இலவசம்
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய T.SHIRT ஒன்று Phone Sim Card மற்றும் 30 Easy way English புத்தகம் ஒன்று இலவசமாக வழங்கப்படும்
இலவச Phone Sim
மேலதிக விபரங்களுக்கு பெயர்.முகவரியை 0777-220002 க்கு SmS செய்யுங்கள்
இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
மேலதிக விபரங்களுக்கு 20/- பெறுமதியான 2 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-561 5 561, 0777-220002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல் நதிக்கரை நாகரிகம்



## நைல் நதி

ஆபிரிக்கக் கண்டத்தில் 96 சதவீதம் பாலைவனப் பிரதேசமாகக் காணப்படும் நாடு எகிப்தாகும். எகிப்து நாட்டில் 4 சதவீதமான வளமான பிரதேசம் 'நைல்' நதியை அண்டியதாகவே காணப்படுகின்றது. நைல் நதிப் படுகையில் காணப்படும் வளமான மண்ணில் கோதுமை, வாற்கோதுமை (பார்லி), மிளட் முதலிய தானியங்கள் சிறப்பாக வளர்கின்றன. அத்துடன், நைல் நதிக் கரைவாசிகள் நீர்ப்பாசனத் தொழில் நுட்பத்துறையில் சிறந்து விளங்கினர்.

புருண்டி நாட்டில் 'ககேரா' கிளைநதியில் உருவாகி இடைக்கிடை வெள்ளை நைல்நதி, மலைநதி, கிராப் நதி, நீலநதி போன்ற கிளை நதிகளைத் தன்னகத்தே இணைத்துக்கொண்டு, மத்திய தரைக்கடலோடு கலக்கும் இந்த நதியானது, உலகிலேயே மிக நீண்ட நதியாகக் கருதப்படுகின்றது. இதன் நீளம் சுமார் 6550 கிலோ மீற்றர்களாகும். நைல் நதியோடு ஒன்றுசேரும் கிளை நதிகளில் வெள்ளை நைல் நதியே மிகப்பெரிய கிளை நதியாகக் கருதப்படுகின்றது.







நைல் நதிக்கரை நாகரிகம் கி.மு 3300 முதல் 1070 வரை நிலவியது. எகிப்து நைல் நதியைத் தன்னகத்தே கொண்டிருப்பதால், ஆதிகாலம் தொட்டு மத்திய தரைக்கடல் வர்த்தக நடவடிக்கைகளில் சிறந்து விளங்கியது. எகிப்து ஆபிரிக்காவின் வட கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இதன் மேற்கில் லிபியாவும் தெற்கில் சூடானும் அமைந்துள்ளன. இதன் கிழக்கு எல்லையில் செங்கடலுடன் இஸ்ரேல் அமைந்துள்ளது. சீன, இந்திய, இலங்கை வர்த்தகர்கள் மாத்திரமன்றி, கீழைத்தேய நாடுகள் அனைத்தும் செங்கடலூடாகவே பொருட்களை ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு சென்றனர்.அதனால், ஆதி முதல் செங்கடல் வர்த்தகத்தை எகிப்து தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தது. அதனால், அதிக வரியைத் திரட்டிக்கொள்ளவும் முடிந்தது. நைல் நதிக் கழிமுகம், அப்போதைய தொடர்பு மத்திய நிலையமாகவும் விளங்கியது.

## தூர்ந்துபோன கால்வாய்

கி.மு 20 ஆம் நூற்றாண்டளவில் நைல் நதியைச் செங்கடலுடன் இணைக்கும் கால்வாயொன்று அக்கால மன்னர்களால் வெட்டப்பட்டபோதிலும், அது பயன்படுத்தப்படாமை காரணமாக தூர்ந்து போய்விட்டதாகக் கூறப்படுகின்றது. கி.மு 600 அளவில் நெகோ என்ற பாரோ மன்னன் அதனை மீண்டும் திருத்தியமைக்கத் தலைப்பட்டான். இப்பணி கி.மு 250 இல் இரண்டாம் தொலமி என்ற மன்னனால் பூர்த்தி செய்யப்பட்டது. அடுத்தடுத்து வந்த நூற்றாண்டுகளில் இக்கால்வாய் பல முறைகளில் திருத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் புனரமைக்கப்பட்டும் வந்துள்ளது. பின்னர் 1000 வருடங்களாக கைவிடப்பட்டு, தூர்ந்து போனதாகக் கூறப்படுகின்றது.





## பாரோ அரசர்களும் பிரமிட்டுக்களும்

அன்றைய எகிப்திய அரசர்கள் 'பாரோ' என்று அழைக்கப்பட்டனர். பாரோ என்றழைக்கப்படும் ஆட்சியாளர்களுக்கு 'ஹொராஸ்' என்ற தெய்வத்தின் தொடர்பிருப்பதாகவும் அந்த தெய்வமே அவர்களை ஆட்சியில் அமர்த்தியிருப்பதாகவும் அக்கால மக்கள் நம்பினர். லௌகீக-ஆத்மீகத் தலைவனாக அக்காலத்து 'பாரோ' அரசர்கள் மதிக்கப்பட்டனர். அக்காலத்து ஆன்மீகத் தலைவர்கள்கூட, பாரோ அரசர்களுக்குக் கீழ்ப்படிந்தே இருந்தனர். அக்காலத்தில் பாரோ என்றழைக்கப்பட்ட அரசர்கள் தெய்வமாக மதித்துப் போற்றப்பட்டனர். அவர்கள் மரணித்ததும் தெய்வத்துக்குரிய ஈமக்கிரியைகளைச் செய்து அடக்கம் செய்யப்பட்டனர். அக்காலத்தில் ஆட்சி மாற்றம் தந்தையிடமிருந்து மகனுக்குச் சேர்வதே வழக்கமாயிருந்தது. ஆண்மக்கள் இல்லாத சந்தர்ப்பத்தில், பெண்களும் ஆட்சிபீடம் ஏறினர்.

எகிப்திய அரசர், அரசிகளின் இறந்த சரீரம் பிரமிட்டுக்களில் அடக்கம் செய்யப்பட்டன. இவர்களின் சரீரம், நீண்ட காலம் சிதைவுறாதிருப்பதற்காக மூலிகை மருந்துகளிடப்பட்டு 'மம்மி'யாக பிரமிட்டுக்களில் பாதுகாக்கப்பட்டன. இப்பிரமிட்டுக்களில், இறந்தவர்களுக்குச் சொந்தமான ஆபரணங்கள், பாவனைப் பொருட்கள், உணவு வகைகள் மற்றும் அவர்களுக்கு விருப்பமான அனைத்துப் பொருட்களும் சேர்த்தே அடக்கம் செய்யப்பட்டன. ஒரு பிரமிட்டுக்குள் சரீரமும் பொருட்களும் அடக்கப்பட்டு, அதனைச் சுற்றியுள்ள ஏனைய பிரமிட்டுக்களில் விதம் விதமான சித்திரங்களும் சிற்பங்களும் செதுக்கப்பட்டன. சூரியன் உதிக்கும்போது இறந்த சரீரத்திலிருந்து வெளியாகும் ஆன்மாவானது, சூரியன் மறையும்போது இலகுவாக பிரமிட்டுக்குள் நுழைந்து இறந்தவர்களின் தேகத்துடன் சேர்ந்து கொள்ளும் என்று அக்கால மக்கள் நம்பினர்.

உலகின் முதலாவது விஞ்ஞானியும் வைத்தியரும் ஜோதிடக் கணிப்பாளரும் பிரமிட் நிர்மாணிப்பாளருமான 'இம்ஹொடெப்' என்பவர் கி.மு 2600 வருடங்களுக்கு முன் வாழ்ந்துள்ளார். கி.மு 2630-2611 காலகட்டத்தில் ஆட்சி செய்த ஜோசர் மன்னனின் பிரமிட்டை நிர்மாணித்த பொறியியலாளராக இவர் கருதப்படுகின்றார்.

பண்டைய உலக அதிசயங்கள் ஏழில் ஒன்றாகக் கீசாவில் உள்ள 'குஃபு' மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட பிரமாண்டமான பிரமிட் கருதப்படுகின்றது. அந்தவகையில், நைல் நதியின் மேற்காக அமைந்துள்ள பிரமிட்டுக்களின் எண்ணிக்கை தொண்ணூற்றுக்கும் அதிகமானதாகும்.

## அபூசிம்பல்

கி.மு 3000 ஆம் ஆண்டளவில் வட எகிப்து, தென் எகிப்து எனப் பிரிந்திருந்த எகிப்தானது, கி.மு 2600 ஒன்றிணைந்தது. அக்காலத்தில் 3 ஆம் துத்மொஸ் அரசனாக இருந்தான். இவனுக்குப் பின்னர்,20 ஆம் வம்சத்தில் ரெம்செஸ் என்பவன் அரசனானான். அவன் மொசப்பத்தேமியாவுடன் போரிட்டதோடு, பல வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களுடன் யுத்தம் செய்து, நாட்டைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்டான்.

இரண்டாம் ரெம்செஸ் என்ற மன்னனால் 'அபூசிம்பல்' மலையுச்சியில் கி.மு 1301-1234 இல் இரண்டு தேவமாளிகைகள் கட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றது. பிரதான தேவமாளிகை 108 அடி உயரமும், 124 அடி அகலமும் கொண்டதாகும். இதன் கர்ப்பக மனையினுள் ஆமென்ரே, ரேஹெகாத்தி, தாஹ் போன்ற சூரிய வம்ச சிலைகளும் ரெம்செஸ் மன்னனின் சிலையொன்றும் காணப்படுகின்றன.



## சூரியக் கடவுள் நம்பிக்கையும் மரணித்தவர்களின் புத்தகமும்

அக்காலத்தில் 'ரே' என்ற சூரியக் கடவுளையும் 'ஒரிஸிஸ்' என்னும் மறுபிறவிக் கடவுளையும் ஆட்சி, அதிகாரம் சம்பந்தப்பட்ட கடவுளாக 'ஹொராஸ்' என்ற கடவுளையும் அக்கால நைல் நதிக்கரைவாசிகள் நம்பினர். இம்மூன்று கடவுள்களுடனும் 'பாரோ' என்றழைக்கப்படும் அரசர்களுக்குத் தொடர்பிருந்ததாகவும் அக்காலத்தைய மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர்.

நைல் நதிக்கரைவாசிகளின் சமய, வணக்க, வழிபாடு, நம்பிக்கைகள் பற்றி அறிய உதவும் நூலாக 'மரணித்தவர்களின் புத்தகம்' திகழ்கின்றது. இது பப்பிரஸ் புல்லிலாலான கடதாசியில் எழுதப்பட்டுள்ளது. மனிதன் இவ்வுலகில் செய்யும் நன்மை, தீமைகள் அடுத்த பிறவியில் பாதிப்புச் செலுத்தும் என்றும் தெய்வங்கள், பேய்கள், அவற்றின் ஆற்றல்கள், ஈமச் சடங்குகள், அவற்றின்போது ஓதப்படும் மந்திரங்கள் என்பன இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

-செம்மைத்துளியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி

## முகாமைத்துவம் - 10

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# சிறந்த கல்விக்கு ஓர் இலக்கு

கல்வியில் வெற்றிபெற ஆரம்ப உந்து சக்தியாக அமைவது இலக்காகும். கல்வியில் நாம் அங்கத்துவம் பெற்று இப்பாரினில் சாதனைகளைச் செய்திட, ஆரம்பத்திலேயே இலக்கைத் தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதன்படி, கல்வியில் ஆர்வத்தை உருவாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் அம்சம்தான் இலக்காகும். இலக்கை மையமாக வைத்து அதன் உள்ளடக்கங்களாக கல்விச் செயற்பாடுகள் அமைய வேண்டும்.

## இலக்கை அடைதல்

இலக்கை அடைதலே கல்வியின் பெறுபேறாகும். ஒருவன் இலக்கை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். இலக்கு என்பது வெறும் வாய்ப்பேச்சாகவோ அல்லது தன்னைப் பிறரிடத்தில் புகழுரைக்கும் செயற்பாடாகவோ இருத்தல் கூடாது. மாறாக; இலக்கில் நோக்கங்கள் இருக்க வேண்டும். நோக்கத்தில் செயற்பாடுகள் அமைய வேண்டும். செயற்பாட்டில் முயற்சி இருக்க வேண்டும். அதுவே இலக்கை அடைவதற்கான சிறந்த பாதையாகும்.

நடைமுறையில் நம்முடைய ஒவ்வொரு சிறிய செயற்பாடும் ஒரு சிறிய இலக்கை அல்லது முடிவையே கொண்டிருக்கின்றது. அதன்படி, நாம் எப்போதும் குறிப்பிட்ட இலக்குகளோடுதான் பதிலளிக்கிறோம். இலக்கு இல்லாமல் பதிலளிப்பது இல்லை. உதாரணமாக; நாம் நடந்து செல்லும்போது நம் எதிரில் வரும் ஒரு மாணவனைப் பார்த்து, ''எங்கே போகிறாய்?'' என்று கேட்டால் அவன், ''சும்மா போகிறேன்'' என்று கூறுவான். அது மரபுவழிச் சொல்லே தவிர, அவனும் ஏதோ ஒரு நோக்கோடுதான் செல்கிறான். ஆகவே, நாம் ஓர் இலக்கை அடைவதற்கு தொடர்ந்து செயல்படுவதோடு, பல நடத்தை நுணுக்கங்களையும் பலதரப்பட்ட துலங்கல்களையும் பயன்படுத்துகிறோம். இவை கல்வியில் அடிப்படையாகத் தோன்ற வேண்டும்.



## இலக்கைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துவோர்

ஒவ்வொரு மாணவரினதும் இலக்கைத் தீர்மானிப்பதில் அவரவருடைய பெற்றோர்களும் ஆசிரியர்களும் செல்வாக்குச் செலுத்துகின்றனர். பாடங்களில் மதிப்பெண்கள் பெறுவதைக் குறுகிய கால இலக்காகவும், தொழிலைத் தேர்ந்தெடுப்பதை நீண்டகால இலக்காகவும் கருதி அவற்றை அடைய வேண்டிய வழிமுறைகளை ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தெளிவாகக் கூற வேண்டும். பாடங்களை ஆசிரியர்கள் கற்பிப்பதுடன், இலக்குகளை நிர்ணயித்து, அதனை அடையவும் மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும். இதுவே ஆசிரியர்களின் முதன்மையான கடமையாகும். அவ்வாறே, பெற்றோரும் மாணவர்களின் குறித்த இலக்கை அடைவதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும்.




## இலக்கின் முதற்படி

'நீங்கள் எதிர்காலத்தில் எதனைச் சாதிப்பதற்கு விரும்புகின்றீர்கள்?', 'உங்களுடைய கனவுகளை நிஜமாக்குவதற்கு எந்தவகையான தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும்?' போன்ற வினாக்கள் இலக்கின் முதற்படியாக அமைய வேண்டும். இத்தீர்மானமே இலக்கிற்கு ஆதாரமாக அமையும்.

இலக்கு என்பது எவ்வாறு அமைய வேண்டும்? என்பதை SMART என்ற தொடரால் குறிக்கலாம்.

| | | |
|---|---|---|
| S - Specific | - | தெளிவானது. |
| M - Measurable | - | அளவிடக்கூடியது. |
| A - Attainable | - | அடையக்கூடியது. |
| R - Realistic | - | யதார்த்தமானது. |
| T - Time Bound | - | கால எல்லை உடையது. |

## இலக்கின் அவசியம்

- இலக்குத் தீர்மானிக்கப்பட்டால் வாழ்க்கையில் வெற்றி பெறலாம். இலக்கு இல்லாத வாழ்க்கை தோல்விதான்.
- வெற்றியை ஊக்கப்படுத்தும்.
- தன்னம்பிக்கையை வளர்க்கும்.
- நேர முகாமைத்துவம் தொடர்புறுவதால் சிறப்பாகச் செயற்படலாம்.

(தொடரும்...)

-எம்.ஏ.எஃப்.சப்ரானா



HNB
சிங்கிதி

உலகை வெற்றிகொள்ளும் சிறுவர்கள் 2010

கல்வி அமைச்சு

ஹற்றன் நஷனல் வங்கி கல்வி அமைச்சுடன் இணைந்து நடாத்தும்
அகில இலங்கை பாடசாலைகளுக்கான சித்திர, சிறுகதை, கட்டுரை, தனிப்பாடல், பேச்சு, குறுநாடகப் போட்டிகள்

சித்திரம் (ஆண்டு 1-13)
சித்திரத்திற்கான விடயப்பொருள் - (1) ''எனது கிராமம்''
(2) ''நான் மிகவும் விரும்பும் தேசியவிழா''.
(3) ''இயற்கையின் எழில்''

சிறுகதை (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)

கட்டுரை (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)
கட்டுரைக்கான விடயப்பொருள் - ''தகவல் தொழில் நுட்பமும் சிறுவர்களும்''.
சொற்கள் 1000 தொடக்கம் - 1500 வரை.

தனிப்பாடல் (ஆண்டு 6-13 சிங்களம்/தமிழ்)

பேச்சு (ஆண்டு 9-13 சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்)
பேச்சிற்கான விடயப்பொருள் - ''கல்விச் செல்வம் என்றும் அழியாதது.''
பேச்சு 4 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

குறுநாடகம் (சிங்களம்/தமிழ்)
நாடகம் 10 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்

போட்டிகள் பற்றிய மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் எந்தவொரு ஹற்றன் நஷனல் வங்கிக் கிளையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தனிப் பாடல் / பேச்சு / குறுநாடகப் போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 2010 ஜூலை மாதம் 12ம் திகதிக்கு முன்பும் சித்திரம்/கட்டுரை/சிறுகதை போட்டிகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் 2010 ஜூலை மாதம் 30ம் திகதிக்கு முன்பும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மாவட்ட மட்டத்திலான போட்டிகள் 2010, ஜூலை மாதம் 17ம்திகதி மாவட்ட நிலையங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
பேர்ஜி - 011-2661983, பிரியான் - 011-2661993

அனுசரணை :
DailyMirror
HNB



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் பாது



"நாம் அனைவரும் சூழலின் பொறுப்பாள... எந்தவித உரிமையும் இல்லை. நமது மூதா... பாதுகாப்பாக நம்மிடம் ஒப்படைத்தது போ... இதனைப் பாதுகாக்கவேண்டும்"

**150 வருடங்களுக்கு முன்னர் செவ்விந்திய ஆதிவாசிகளின் தலைவன் கூறிய அறிவுரை இன்றைக்கும் பொருத்தமானது. ஆனால், இன்று மானிட செயற்பாடுகள் காரணமாக இந்த சுற்றாடல் பாதிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருவதோடு, மண் வளமும் குன்றி வருகின்றது.**

## மண் பற்றி...

பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் அழிவுகள் (எச்ச சொச்சங்களின்) காரணமாக மண் உருவாகின்றது. அந்தவகையில், பூமியின் மேற் பரப்பு மெல்லிய மண்படையால் மூடப்பட்டுக் காணப்படுகின்றது. அதன் மேல் வளரும் தாவரங்கள், வாழும் விலங்குகள் என்பனவற் றின் ஆயுள் தங்கியிருப்பதும் இந்த மண்படை மூலமாகும்.

அத்துடன், தாவர வளர்ச்சிக்குத் தேவையான சேர்வைகள், கனிப் பொருட்கள், நீர் என்பன கிடைப்ப தும் இந்த மண்ணில் இருந்தாகும். மண்,வண்டல், சேறு, தூசு, நீர், வாயு, கனிப்பொருட்கள், பக்றீரியாக்கள் என்பவற்றின் சேர்வை காரணமா கவும் மண்படை உருவாகின்றது.

## மண்ணின் உருவாக்கம்

மண் உருவாக்க வேகம் மிகவும் குறைவாகவே நடைபெறுகின்றது. இயற்கையான சூழலில் 5.செ.மீ அளவு மண் உருவாவதற்கு 300 வருடங்கள் வரை செல்கின்றது. ஒரு மீற்றர் அளவு ஆழத்திற்கு மண்படை உருவாக 40,000 வரு டங்கள் வரை பிடிக்கும்.இக்காலப் பகுதிக்குள் பல்வேறு விதமான கலங்கள், துணிக்கைகள், தாவர மற்றும் விலங்குகளின் அழிவின் எச்சசொச்சங்கள் என்பன தாக்கம் புரிந்து ஒன்றாக இணைவதன் மூலம் மண்படை உருவாகின்றது.

## மனிதனால் ஏற்படுத்தப்படும் அரிப்பு

'துரிதப்படுத்தப்பட்ட மண் அரிப்பு' என்றும் இது அழைக்கப்படும். மண்அரிப்பை இயற்கையாகப் பாதுகாக் கும் காடுகளை அழித்தல், தீயிட்டு எரித் தல் போன்ற வழிகளால் இச்செயற்பாடு நிகழ்கின்றது. இத்தகைய நிகழ்வுகளால் மண்ணுக்குக் கிடைக்கும் இயல்பான பாதுகாப்பு இல்லாமல் போய் மண் காற்றாலும் மழையாலும் அரிபட்டுச் செல்கின்றது. மண்படை உருவாகும் வேகத்தைவிட மண்அரிப்பு வேகம் இதனால் விரைவுபடுகின்றது.

## மண் வளம் குன்றுவதால் ஏற்படும் பாதிப்பு

அரிப்புக்கு உட்படுவது பூமியில் உள்ள மண்ணின் மேல் தட்டாகும். மண்ணில் உள்ள துணிக்கைகள், பசளைகள், அரிபட்டுச் செல்லும்போது மண்வளம் செழுமையற்று தாவர வளர்ச்சிக்குப் பொருத்தமற்ற பூமியாக மாறுகின்றது. மனிதனும் விலங்குகளும் உணவு பெறு வது தாவரங்களின் ஊடாக என்பதால், மண் செழிப்பிழக்கும்போது மனிதனுக் கும் ஏனைய விலங்குகளுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படுகின்றது.

**துணிக்கைகளின் அரிப்பு இரண்டு வகைகளில் நடைபெறுகின்றன:**

1. இயற்கையாக நடைபெறும் அரிப்பு (Natural Erosion)
2. மனிதனால் மேற்கொள்ளப்படும் அரிப்பு Accelerated Erosion)

## இயற்கையான அரிப்பு

மனிதனின் தலையீடு இன்றி இயற்கைக் காரணிகளால் இந்த அரிப்பு ஏற்படுகின்றது. இயற்கை மண்அரிப்புக் காரணமாக மண்படை அரிபட்டுச் செல்லும் வேகத்தைவிட, உருவாகும் வேகம் குறைவாகும். இந்த இரண்டு செயற்பாடுகளும் சமநிலையாக நிகழும்.

* கடும் மழை
* வெள்ளம்
* மண் சரிவு
* கடல் அரிப்பு
* காற்று
* பூகம்பம்

## மண் வளத்தை இழக்கச் செய்யும் மனித செயற்பாடுகள்

**எரிபொருட்கள் அகழ்வு:**

இரத்தினக் கல் அகழ்வு, ஓடு, செங்கல் உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களுக்காக மண் பெறுதல், அந்தவகையில், மலைப் பாங்கான நிலப்பிரதேசங்களில் முறையற்ற முறையில் செய்யப்படும் அகழ்வுகளால் மண்வளம் குன்றுகின்றது.

**குடியிருப்புக்கள்:**


கட்டட நிர்மாணம், போக்குவரத்து வசதிகளை விஸ்தரித்தல் போன்ற மானிட செயற்பாடுகளாலும் மண் துணிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. இதனால், மண்ணில் உள்ள கனிப்பொருட்கள் அரிபட்டு வடிந்து சென்று மண்வளத்தைப் பாதிக்கின்றது. இத்தகைய கட்டட நிர்மாணங்கள், போக்குவரத்து விஸ்தரிப்புக்களின் போது மண்ணின் மேற்பரப்பில் வேறு பொருத்தமற்ற சேர்வைகள் கலப்பதால் பாதிப்பு நிகழ்கின்றது.

## மண் துணிக்கைகளின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்


**மழைவீழ்ச்சியின் போக்குகள்:**

மழைவீழ்ச்சி கூடிக் குறைதலுக்கு ஏற்ப மண்ணின் மேற்படையின் பாதுகாப்பும் நிகழ்கின்றது. மழைவீழ்ச்சி அதிகமாகும்போது கூடுதலான மண் அரிப்பு நிகழும். மழைவீழ்ச்சி குறைவாக இருக்கும்போது மண் அரிப்புக் குறைவாக நிகழும்.

## காற்றுக் காரணமாக நிகழும் மண் அரிப்பு




## மழை காரணமாக நிகழும் அரிப்பு




**பூமியின் தன்மை:**

நிலத்தின் அமைவு சரிவாகவும் பள்ளத்தாக்கானதாகவும் இருந்தால் அரிப்பு விரைவாக நடைபெறும். அத்தகைய நிலத்தில் நீர் வடிந்து போதல் அதிகமாக நடைபெறும். அதேபோன்று, சமதரையான நிலத்தில் வந்து சேரும் நீர் பூமிக்குள் கூடுதலான அளவு உறிஞ்சி எடுக்கப்படும்.

**மண்ணின் பௌதீக பண்பு:**

இதன்மூலம் கருதப்படுவது மண்ணின் உள்ளடக்கம், சேர்வைகள் ஆகும். மண்ணில் அதிமாகக் காணப் படுவது மண்ணா, மணலா, வண்டலா

**காடழிப்பு:**

காடழிப்பாலும் மண்வளம் அற்றுப் போகின்றது. மரங்கள் இல்லாத நிலத்தில் மழை பொழிவதால் நீர் துரித மாக மண்ணுக்குள் ஈர்க்கப்படுகின்றது. ஆனால், மரங்கள் தாவரங்களால் மூடப்பட்ட நிலத்தில் நீர் மண்ணுக்குள் ஈர்த்தல் தாமதமாக நடைபெறுகிறது. அத்துடன், காடுகளையும் சமவெளிப் புற்தரைகளையும் தீயிட்டுக் கொளுத்துவதன் மூலம் மண் வளத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்றது.

**பயிர்ச்செய்கை:**

அடிக்கடி மண்ணில் நிகழும் மாற்றங் களுக்கு பயிர்ச்செய்கை முக்கிய காரண மாகின்றது. மண் வளத்திற்கு அச்சுறுத்த லான உரம், பசளை வகைகள், கிருமி நாசினிகளின் பயன்பாடுகளினாலும் மண்வளத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுகின்றது.



சுரங்க அகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர்கள் ஆவோம். சூழலை நாசப்படுத்த நமக்கு
தையர் நாம் வாழும் இந்தப் பூமியின் சூழலை
ன்று நாமும் எதிர்கால சந்ததியினருக்காக
-சியடெல்




என்பதாகும். மணல் மண் நீரை விரைவாக உறிஞ்சச் செய்யும். அரிபட்டு செல்வதும் குறைவாக இருக்கும். அத்துடன், மண் மேற்பரப்பில் இடைவெளிகள், மென்மைத்தன்மை இருக்குமானால் நீர் அதிகளவில் மண்ணுக்குள் உறிஞ்சப்படும்.

அதேநேரம், இயற்கையாக மண்ணின் மேற்பரப்பில் மரங்கள், செடி கொடிகள், தாவரங்கள் அடர்த்தியாக வளர்ந்து காணப்படுமாயின் மண் அரிப்புத் தடுக்கப்படுகின்றது. மரங்களில் இருந்து விழும் இலைகள், உலர்ந்த சருகுகள், நிலத்தில் படரும் செடி கொடிகளாலும்

# வளத்தைப் காப்போம்...

மண்ணில் உள்ள துணிக்கைகள் சேர்வைகள் பாதுகாக்கப்பட்டு மண்வளம் பாதுகாக்கப்படக் காரணமாக அமைகின்றது.

### மண் துணிக்கைகள் அரிபட்டுச் செல்வதால் ஏற்படும் விளைவு

மண் அரிபட்டுச் செல்வதால் மண்ணின் மேற்பரப்பில் உள்ள மண்ணுக்கு வளத்தையும் செழிப்பையும் ஏற்படுத்தக்கூடிய துணிக்கைகள் அரிபட்டுச் செல்கின்றன. அதன் காரணமாக மண்ணின் வளம் குன்றி செழுமை இல்லாத நிலை ஏற்படுகின்றது. மேற்பரப்பில் உள்ள மண் அரிபட்டுச் செல்வதால் மேற்படை அகழ்வு ஏற்பட்டு குழிகள் ஏற்படுவதோடு, மண் கரடுமுரடான தடிப்பு நிலையை அடைகின்றது.

### மண் துணிக்கைகளின் பாதுகாப்பு

பூமியை விஞ்ஞானரீதியாகப் பயன்படுத்துவதும் பாதுகாப்பதும் மண்ணில் உள்ள துணிக்கைகளுக்கான பாதுகாப்பு எனலாம். இத்தகைய பாதுகாப்பு முறைகளாவன;


முறையற்ற நிர்மாணம்

- மழைநீர் நிலத்தில் நேரடியாகப் படிவதைக் குறைத்தல்/கட்டுப்படுத்தல்.
- மண்ணில் இருந்து வடிந்தோடும் நீரின் அளவையும் வேகத்தையும் குறைத்தல்.
- தேவையற்ற முறையில் மண் படையை மென்மையாக்குவதைத் தவிர்த்தல்.

### மண்வளத்தையும் துணிக்கைகளையும் இயந்திர உதவியுடன் பாதுகாத்தல்

**தட்டுத் தட்டான முறை:**
மேட்டு நிலங்கள் அல்லது வளைவு பள்ளத்தாக்கான நிலத்தில் தட்டுத் தட்டாக படி அமைப்பில் பாத்தி அமைத்துப் பயிரிடல்.

**வாளி அமைப்பில் வடிகால்:**
நிலத்தில் சரிவான முறையில் வாளி அமைப்பில் வாய்க்கால் வெட்டி நீர் வடிந்து போகாமல் பாதுகாத்தல். இந்த முறையில் நீர் வேகமாக வடிந்தோடாமல் வாய்க்கால் பகுதிகளில் தேங்கி நிற்பதால் அதன் ஊடாக மண்வளம் பாதுகாக்கப்படுகின்றது.

**பகுதி பகுதியான வடிகால் முறை:**
மேற்படியான வாய்க்காலின் உள் பகுதியில் படிமுறை, படிமுறையாக அரை அமைப்பில் வாய்க்கால் அமைத்தல். இந்த முறையாலும் நீர் வடிந்தோடும் வேகம் குறைந்து நீர் தேங்கி மண் துணிக்கைகள் வெளியேறுவது தடைப்படும்.

**சேறு, வண்டலுடனான வாய்க்கால் அமைப்பு:**
அரித்துச் செல்லப்படுகின்ற களி, வண்டல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தி ஓரிடத்தில் சேமிப்பதற்காக இந்த வாய்க்கால் அமைக்கப்படும்.

**கற்கள் கொண்டு தடை ஏற்படுத்தல்:**
மண் அரிப்புக்குள்ளாவதைத் தடுக்க வாய்க்கால் போன்று பகுதி பகுதியாக இடையிடையே கற்களால் சிறிய தடைகளை ஏற்படுத்தல். அப்போது, வடிந்தோடும் நீர் அப்பகுதிக்குள் தேக்கமடையும்.

**மண்படை அமைத்தல்:**
வாய்க்கால் வெட்டி அதன் மண்ணை நிலத்தில் நீர் தடையை ஏற்படுத்தும் விதமாகப் போடுதல். இதன் மூலமும் நீர் வடிந்தோடுவது தடைப்படும். வெட்டிய வாய்க்காலுக்கு கீழ்ப்பக்கமாக மண்ணைக் குவிக்காது மேல்பக்கமாகக் குவித்தல் வேண்டும்.


வளைவு முறை


காற்றுக் காரணமாக ஏற்படும் அரிப்பு

### உயிரியல் பல்லின முறை

**மூடுபயிர் வளர்த்தல்:**
இறப்பர், தென்னை போன்ற பயிர்களை வளர்த்தல் 'மூடுபயிர்' பாதுகாப்பு முறை எனப்படுகின்றது. இத்தாவரங்கள் காரணமாக மழைநீர் நேரடியாக அப்பகுதி நிலத்தை வந்தடைவதில்லை. இதன்மூலம் மண் அரிபடுவதைத் தடுக்கமுடியும்.

**மூடி வைத்தல்:**
மண்ணைத் திறந்து வைக்காது மூடி வைத்தல் இன்னொரு முறையாகும். வைக்கோல், தும்புச்சோறு, உமி, மரத்தூள், புல், வக்காளத்து இலை, தென்னோலை, தென்னை மட்டை போன்றவற்றைக் கொண்டு நிலத்தை மூடிவைப்பதன் மூலமும் மண்ணைப் பாதுகாக்கலாம்.

**பற்றைத் தாவரம் வளர்த்தல்:**
நிலத்தில் படரும் கொடி வகைத் தாவரம், பற்றைத் தாவரங்கள் அல்லது 'நார் வேரித்' தாவரங்களை வளர்ப்பதாலும் மண் அரிப்பில் இருந்து பாதுகாத்துக்கொள்ளமுடியும். இவ்வகையான தாவரங்களால் நீர் வடிந்து செல்லும் வேகம் குறைவடையும்போது மண் அரிப்புத் தடைப்படுகின்றது.

**தரைக்குப் பொருத்தமான பயிர்ச்செய்கை முறைகள்:**
பள்ளத்தாக்கான, வளைவான நிலமாயின் அத்தகைய நிலத்திற்கும் சம தரையாயின் அவ்வாறான நிலத்திற்கும் பொருத்தமான பயிர்களை வளர்ப்பதாலும் மண் அரிப்பைத் தடுக்கமுடியும். உ+ம் - மரக்கறிச் செய்கை, கிழங்குச் செய்கை, கால்நடைகளுக்கு புல் வளர்த்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

### காற்றால் பாதுகாத்தல்

காற்றின் காரணமாக மண் அள்ளுண்டு சென்று அரிப்புக்குள்ளாவதைத் தடுக்க பின்வரும் வழிமுறைகள் கையாளப்படுதல் வேண்டும். இயற்கையான காற்றுப் பாதுகாப்பு முறையைக் கையாள்தல், தொடர்ச்சியாகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல் மற்றும் காற்று வேகமாக தரையில் படுவதைத் தடுக்கும் பாதுகாப்பு முறைகளையும் கையாளலாம்.

**அமீர் ஹுஸைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு நாடு
# கினியா

**அரசு:** ராணுவ அரசு. **சுதந்திரம்:** பிரான்சிடமிருந்து, 1958 ஒக்டோபர் 2.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டி கினீ (Republic of Guinea)
**தேசிய விடுமுறை:** சுதந்திர தினமாகிய ஒக்டோபர் 2.
**அதிபர்-பதில்** (2009): செகூபா கொனேட். **பிரதமர்** (2009): ஜீன்-மாரி-டோர்.


கோனக்ரி துறைமுகம்

## புவியியல்

மேற்கு ஆபிரிக்க நாடான கினியா, அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடற்கரையோரத்தைக் கொண்டுள்ளது. இதன் **வடக்கு**-கினியா பிசோ, செனகல், மாலி; **கிழக்கு**-ஐவரிகோஸ்ட், **தெற்கு**-சியெர்ரா லியோன், லைபீரியா ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. கரையோரத் தாழ்நிலம், உயர்நிலங்களையும் மலைத்தொடர்களுடன்கூடிய மத்திய பிரதேசம், கிழக்கு சவன்னா புல்நிலம், தூர தென் கிழக்குப் பிரதேச அடர்ந்த காடுகள் என நான்கு பிரதான தரைத்தோற்ற வேறுபாடுகளைக் கொண்டுள்ளது.




வடமேற்கு-தென் கிழக்காக நீண்டு செல்லும் மத்திய மலைப்பிரதேசத்தில் இருந்து நைகர், கெம்பியா மற்றும் செனகல் ஆகிய பெரிய நதிகளும் எண்ணற்ற சிறிய நதிகளும் பாய்கின்றன. 4180 கி.மீற்றர் நீளமான நைகர் நதி, ஆபிரிக்காவின் மூன்றாவது அதிநீளமான நதியாகும்.

**மொத்தப் பரப்பு:** 94,927 சதுரமைல் (245,861 ச.கி.மீ).
**தலைநகரமும் பெரிய நகரமும்:** கோனக்ரி.
**உயர் சிகரம்:** நிம்பா மலை 5,748 அடி (1752 மீ);
**தாழ் மையம்:** அட்லாண்டிக் சமுத்திரம்.
**சனத்தொகை:** 10,057,975. **நாணயம்:** கினியன் ஃப்ரேங்.
**மொழிகள்:** பிரெஞ்ச் (உத்தியோகபூர்வ மொழி), தேசிய மொழிகள் (மலிங்கி, சுசு, ஃபுலானி).
**இனங்கள்:** பியூல் 40%, மலிங்கி 30%, சுசு 20%, சிறிய இனக்குழுக்கள் 10%.
**சமயங்கள்:** இஸ்லாம் 85%, கிறிஸ்தவம் 8%, உள்ளூர் மத நம்பிக்கைகள் 7%.
**எழுத்தறிவு** (2003): 29.5%. **இணையத்தளக் குறியீடு:** .gn
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** 224
**தேசிய சின்னங்கள்:** மரம், மலர், பறவை, மிருகம், விளையாட்டு என எதுவும் பிரகடனப்படுத்தப்படவில்லை.

தேசிய இலச்சினை








**தேசிய கீதம்:**
Peuple d'Afrique!
Le Passe historique!
Que chante
l'hymne de la
Guinee fière et jeune
Illustre epopee de nos freres….. என ஆரம்பமாகின்றது.




## வரலாறு

கி.பி 900 களின் ஆரம்பத்தில் சுசு இன மக்கள் வட பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து, இன்றைய கினியா பகுதியில் குடியேறினர். சுசு நாகரிகம் 13 ஆம் நூற்றாண்டில் உன்னத நிலையை அடைந்தது. இன்று சுசு இன மக்கள் கினியாவின் மொத்த சனத்தொகையில் 20% ஆக உள்ளனர். 16 ஆம் நூற்றாண்டில் இருந்து 19 ஆம் நூற்றாண்டு வரை ஃபுலானி பேரரசின்கீழ் இப் பிராந்தியம் ஆளப்பட்டது. 1849 இல் பிரான்சின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. ஆரம்பத்தில் 'பிரெஞ்ச் கினியா' என அழைக்கப்பட்ட பிரதேசம், இறுதியாக 1895 இல் பிரெஞ்ச் மேற்காபிரிக்காவின் ஒரு பகுதியானது. 1958 வரை பிரான்சியரின் ஆதிக்கத்தின்கீழ் இருந்த கினியா, 1958 ஒக்டோபர் 2 ஆம் திகதி சுதந்திரம் பெற்றது. நாட்டின் முதலாவது அதிபராக செகெள டௌர் தலைமையில் அரசு நிறுவப்பட்டது. இதுவே ஆபிரிக்காவில் அமைந்த முதலாவது மார்க்சிஸ அரசு என்பது குறிப்பிடத்தக்கது.





## காலநிலை

ஆபிரிக்காவில் அதிக மழை பெறும் நாடுகளில் ஒன்றாகிய கினியாவில் நொவெம்பர் முதல் மார்ச் வரை வெப்பநிலை குறைவாகக் காணப்படும். எனினும், டிசம்பர் முதல் பெப்ரவரி வரை வீசக்கூடிய புழுதிப் புயல் சஹாரா பாலைவனத்திலிருந்து ஆரம்பித்து நாடெங்கும் பரவிவிடும். ஜூலை முதல் ஓகஸ்ட் வரை அதிக மழைவீழ்ச்சி காரணமாக வீதிகள் மூடப்படும்.

அதிபர்


## கலாசாரம்

கிழக்கு ஆபிரிக்க தேசிய இனத்தினரான கினிய மக்கள் பல்வேறு இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள். ஏனைய மேற்கு ஆபிரிக்க நாடுகளைப் போலவே கினியாவும் உன்னதமான இசைப் பாரம்பரியத்தைக்கொண்ட ஒரு நாடாகும். 'மென்டே' எனப்படும் இசை சர்வதேச ரீதியில் நன்கு அறியப்பட்ட ஒரு இசையாகும்.

பிரதமர்


## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2005): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் : 26,300; செல்லிடத் தொலைபேசிகள்: 189,000. **வானொலி நிலையங்கள்** (2006): FM 5, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 6 **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 173; இணையத்தளப் பாவனையாளர்கள் : 50,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2006):மொத்தம் 837 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2003): மொத்தம் 44,348 கி.மீற்றர் (இதில் 4342 கி.மீ-செப்பனிடப்பட்டவை; 40,006 கி.மீற்றர்-செப்பனிடப்படாதவை). **நீர் வழிப் போக்குவரத்து** (2005): 1300 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** கோனக்ரி, கம்சர். **விமான நிலையங்கள்** (2007): 16.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 4%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், கோப்பி, அன்னாசி, கஸ்ஸாவா, வாழைப் பழங்கள், வற்றாளைக் கிழங்கு, ஆடு-மாடுகள், செம்மறியாடுகள், பெறுமதிமிக்க மரங்கள். **தொழிலாளர் தொகை** (2006): 3.7 மில்லியன் (விவசாயம் 76%, கைத்தொழிலும் சேவைகளும் 24%). **கைத்தொழில்கள்:** தங்கம், வைரம், அலுமினியம், மென்பொருட்கள். **இயற்கை வளங்கள்:** பொக்ஸிட், இரும்புருக்கு, வைரம், தங்கம், யுரேனியம், நீர்மின்வலு, மீன். **ஏற்றுமதிகள்** (2007): பொக்ஸிட், அலுமினியம், தங்கம், வைரங்கள், கோப்பி, மீன், விவசாயப் பொருட்கள். **இறக்குமதிகள்** (2007): பெற்றோலிய உற்பத்திகள், உலோகம், இயந்திரங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், புடவை வகைகள், தானியங்களும் ஏனைய உணவுப் பொருட்களும். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** ரஷ்யா, ஸ்பெய்ன், பிரான்ஸ், பெல்ஜியம், தென் கொரியா,ஐக்கிய அமெரிக்கா, சுவிற்சர்லாந்து, உக்ரைன், சீனா, நெதர்லாந்து.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில...

- தேசிய நூதனசாலை (Musee National)
- Iles de Los - தீவு
- நிம்பா மலை
- ககிம்பொன் குகைகள்
- Ile de Roume கடற்கரை
- Ile de Roume கடற்கரை
- கின்கொன் நீர்வீழ்ச்சி
- La Voile de la Maree கண்கவர் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய காலத்தில் உலகின் பல்வேறு பகுதிகளில் பல பேரரசுகள் விரிவான பிரதேசங்களை ஆட்சி செய்ததாக வரலாறு கூறுகின்றது. இவற்றில் சுமேரியப் பேரரசு, எகிப்தியப் பேரரசு, கிரேக்கப் பேரரசு, சீனப் பேரரசு, அலெக்ஸாண்டரின் பேரரசு, உரோமப் பேரரசு என்பன குறிப்பிடத்தக்கன. சுமேரியப் பேரரசின் காலத்தில் 'மெசப்பத்தேமிய' நாகரிகம் நன்கு வளர்ச்சி கண்டது. அதுபோல் எகிப்தியப் பேரரசின் காலத்தில் 'நைல்நதி' நாகரிகமும், கிரேக்கப் பேரரசு நிலவிய காலத்தில் கிரேக்க நாகரிகமும் நன்கு வளர்ச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பண்டையகாலப் பேரரசுகள்



## சுமேரியப் பேரரசு

சுமேரியப் பேரரசு நிலவிய பிரதேசம் மெசப்பத்தேமியாவாகும். மெசப்பத்தேமியா என்பது தற்கால துருக்கியும் மற்றும் சிரியா, ஈராக் ஆகியவற்றின் ஒரு பகுதியான யூப்ரடீஸ்-டைக்ரீஸ் ஆகிய நதி தீரத்தில் இருந்த பிரதேசமுமாகும். மெசப்பத்தேமியா என்றால் 'இரு நதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசம்' என்று பொருள்படும். இப்பிரதேசத்தின் ஆட்சி கி.மு 3500 ஆம் ஆண்டளவில் சுமேரியரால் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் பலராலும் இப்பகுதி ஆட்சி செய்யப்பட்டது. கி.மு 2350 வரை தரைப்பிரதேசத்தையும் வர்த்தகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு இவர்கள் நகரங்களை அமைத்தனர். சுமேரியரால் சக்கரம் மற்றும் எழுத்துக்கலை என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகின்றது. இறுதியாக சுமேரியர் கி.மு 2000 ஆம் ஆண்டுகளை அண்மித்த காலத்தில் ஏனைய இனத்தவர்களுடன் இணைந்தனர்.

## எகிப்தியப் பேரரசு

எகிப்து கி.மு 3200 முதல் 'நைல்' நதிக்கரையில் தனி அரசாக செயற்பட்டு வந்தது. 'பார்வோன்' மரபின் வழிகாட்டலின்கீழ் அரசர்களுக்கும் கடவுள்களுக்கும் உரிய 30 அரச வம்சங்கள் எகிப்தை ஆட்சி செய்துள்ளன. இதில் நான்காவது அரச வம்சத்தினரால் (கி.மு 2575-2467) 'பார்வோன்' அரசர்களின் இறந்த உடல்களை அடக்கம் செய்வதற்கு பிரமிட்டுகள் அமைக்கப்பட்டன. 'கீசாவின் பிரமிட்' 4000 ஆண்டுகள் பழைமை





வாய்ந்ததுடன், அக்காலப் பகுதிகளில் உலகின் உயர்ந்த கட்டடமும் இதுதான் என்பது முக்கிய அம்சமாகும். அத்துடன், இது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகவும் திகழ்கின்றது. அவர்கள் கடற்பிரயாணத்திலும் பிரசித்தி பெற்று இருந்தனர். கி.மு 322 இல் அலெக்ஸாண்டர் மன்னனால் எகிப்து கைப்பற்றப்பட்டதும் எகிப்தியப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது.



## கிரேக்கப் பேரரசு

முற்காலத்தில் கிரேக்கம் 'ஹெலாசா' என அழைக்கப்பட்டது. கிரேக்கர்கள் சைப்ரஸ், இத்தாலியின் ஒரு பகுதி,யுக்ரேன், பிரான்சின் தென்பகுதி என்பனவற்றை காலனிகளாக்கிய பின்னர் கி.மு 500-400 வரை கிரேக்கப் பண்பாட்டில் உறுதியாக இருந்தனர். இக்காலம் கிரேக்கத்தின் பொற்காலமாக கருதப்படுகிறது. எதென்ஸ், ஸ்பாட்டா போன்ற நகரங்கள் கலை, கல்வி, அரசியல் என்பனவற்றின் மத்திய நிலையமாக விளங்கின. அரிஸ்டோட்டில், பிளேட்டோ, சோக்ரடீஸ் போன்ற மெய்யியலாளர்கள் இக்காலகட்டத்தில் எதென்ஸில் வாழ்ந்தனர். பண்டைய கிரேக்கர்களால் ஜனநாயக முறை உருவாகியதுடன், பல்வேறு விடயங்கள் பற்றித் தர்க்கித்து பின்னர் தம் கருத்துக்களை வெளியிட்டனர். நகரங்களுக்கிடையிலான யுத்தத்தின் காரணமாக கிரேக்கப் பேரரசின் பொற்காலம் வீழ்ச்சியுற்றது. இதனால், மசிடோனிய மன்னன் பிலிப் கிரேக்கத்தை ஆக்கிரமிக்க வழியேற்பட்டதுடன் பின்னர் அவரது மகனான அலெக்ஸாண்டர் இதனை ஆக்கிரமித்தார்.

## அலெக்ஸாண்டரின் பேரரசு

மசிடோனியாவின் பேரரசர் 3 ஆவது அலெக்ஸாண்டர் 33 ஆண்டுகள் மாத்திரமே வாழ்ந்தார். கி.மு 356 முதல் கி.மு 323 வரையிலான இந்தக் குறுகிய காலத்தில் அவர் அன்றைய பாரசீகமான இன்றைய ஈராக், ஈரான், சிரியா, துருக்கி ஆகிய பிரதேசங்களையும் எகிப்து, கிரேக்கம், பாபிலோனியா போன்ற நாடுகளை உள்ளடக்கிய பரந்த பேரரசையும் நிறுவினார். இப்பேரரசை ஒன்றிணைத்து வைப்பது கடினமான செயலாக இருந்ததுடன், அவரது மரணத்தின் பின் இப்பேரரசு மீண்டும் பிளவுற்றது.

## சீனப் பேரரசு

மனிதனின் தோற்றம் முதற்கொண்டே சீனாவில் மக்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது. கி.மு 1600 ஆம் ஆண்டு முதல் சீனா பல சிறிய இராச்சியங்களை உள்ளடக்கி இருந்ததோடு, கி.மு 221 இல் ஒரு தலைவரின் கீழ் அல்லது பேரரசர் ஒருவரின்கீழ் ஒன்றிணைந்துள்ளது. சீனாவில் அரசர்களின் ஆட்சி தோன்றியது முதல் பல்வேறு அரச வம்சத்தினரால் சீனா ஆளப்பட்டு வந்தது. இக்காலத்தில் ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு சீனப் பெருஞ்சுவர் எழுப்பப்பட்டது. சீனப் பண்பாடு அறிவில் சிறந்தவொன்றாக விளங்கியது. ஐரோப்பியர்களைவிட 200 ஆண்டுகளுக்கு முன்னர் சீனர் கலை, விஞ்ஞானம் என்பனவற்றில் கவனம் செலுத்தியுள்ளனர். ஊழல்கள் மற்றும் ஏழ்மை காரணமாக கி.பி 220 இல் ஹன்டைனஸ்ட் மன்னனின் காலத்தில் சீனப் பேரரசு வீழ்ச்சியுற்றது.

## உரோமப் பேரரசு

உரோமப் பேரரசு கி.மு 31 ஆம் ஆண்டு ஒகஸ்டஸ் சீசரின் தலைமையில் கட்டி எழுப்பப்பட்டது. ஒகஸ்டஸ் சீசர் உரோமப் பேரரசிற்கு அமைதி, செழுமை, பண்பாடு என்பனவற்றை ஏற்படுத்திக் கொடுத்தார். கி.பி இரண்டாம் நூற்றாண்டாகும்போது உரோமப் பேரரசு மத்திய கிழக்கிலிருந்து ஸ்பானியா வரையும் மற்றும் பெரிய பிரித்தானியாவிலிருந்து வட ஆபிரிக்கா வரையிலும் பரந்த பிரதேசமாகப் பரவியது.

இப்பேரரசு இவ்வாறு பரந்திருந்ததால் பிரச்சினைகள் பலவும் உருவாகின. பேரரசு முழுவதும் பரவலாக இருந்த படைவீரர்களுக்குப் பணம் கொடுப்பது முடியாத செயலாகியது. இவ்வேளைகளில், ஜேர்மனியர்களான பார்பேரியர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதல்களால் உரோமப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. அதன்படி, கி.பி 476 இல் உரோமப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. அத்துடன், புராதன உரோமர்களின் தாக்கம் அற்புதமானது. உரோமர்களால் அமைக்கப்பட்ட வீதிகள் இன்றும் ஐரோப்பா முழுவதும் பரவிக் கிடக்கின்றன. அவ்வாறே, ஐரோப்பாவும் இலத்தீன் அமெரிக்க நாடுகளும் இன்றும் உரோமச் சட்டங்களைப் பின்பற்றுகின்றன. உரோமில் பாவனையில் இருந்த இலத்தீன் மொழி இன்று பல மொழிகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் 1

சுட்டெண்: ............................... நேரம்: 45 நிமிடங்கள்

★ *01 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.*

★ **தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**

01. மோப்பம் பிடிக்கும் தன்மை - வீட்டைக் காவல் காக்கும் - அனைத்துமுண்ணி



(1) (2) (3)

02. பாடலில் விபரிக்கப்பட்ட பறவையைத் தெரிவு செய்க.

உற்றார் உறவினர் அனைவரையும்
உண்ண அழைத்து உண்டிடுமே
செத்தால் ஒன்று அவைகளிலே
சேர்ந்து யாவும் அழுதிடுமே



(1) (2) (3)

★ ***03 ஆம், 04 ஆம் வினாக்களில் பிழையான கருத்துக்கள் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்து, அதன்கீழ்க் கோடிடுக.***

03. (1) கத்தரி ஒரு செடி, கத்தரி எமது நாட்டில் வளர்கின்றது.
(2) வெண்டிக்காய் ஒருவகைக் காய்கறி, வெண்டிக்காய் வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.
(3) பலா ஒரு மரம், பலாப்பழம் முக்கனிகளில் ஒன்று.

04. (1) குயில் ஒரு பிராணி. அது காகத்தின் கூட்டில் முட்டையிடும்.
(2) பூனை வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணி. அது நான்கு கால்களை உடையது.
(3) வெளவால் ஒரு பிராணி. அது முட்டை இட்டுத் தன் இனத்தைப் பெருக்கும்.

05. **முதலில் தரப்பட்ட உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது, அது எவ்வாறு தோற்றமளிக்கும் என்பதை அவதானித்து, சரியான உருவைத் தெரிவு செய்க.**



(1) (2) (3)

★ ***06 ஆம் 07 ஆம் வினாக்களில் முதல் இரு சொற்களுக்கு ஏதோ ஒருவகையில் தொடர்பு உண்டு. மூன்றாவது சொல்லுக்கு பொருந்தக்கூடிய நான்காவது சொல்லைத் தெரிவு செய்க.***


06. **ஆசிரியர்-மாணவர், வைத்தியர் - ..................** (1) தாதி (2) நோயாளி (3) மருந்து

07. **நாய் - மிருகம், கிளி - ...............................** (1) பிராணி (2) விலங்கு (3) பறவை

08. **பின்வரும் உருவை வெட்டுவதற்கு ஒரு சதுரக் கடதாசியை எத்தனை மடிப்புகளாக மடிக்கவேண்டும்? சரியான விடையைத் தெரிவு செய்க.**

 ⟶ (1) 3 (2) 4 (3) 2

09. **இங்குள்ள உபகரணங்களை இரு கூட்டங்களாகப் பிரிக்கலாம்.**



A B C D E

இக்கூட்டங்களை சரியாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) A , D / B , E (2) B , D / A , C (3) E , A / C , D

★ ***பந்தியை வாசித்து 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடை தருக.***

> எனது தந்தையார் எனக்கு சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிறங்களில் பந்துகளை வாங்கினார். எனது சகோதரன் தனக்கு நீலம், பச்சை, வெள்ளை ஆகிய நிறங்களில் பந்துகளைப் பெற்றுக்கொண்டான். எனது சகோதரி ஊதா, நீலம், பச்சை ஆகிய நிறங்களில் பந்துகளைப் பெற்றுக்கொண்டாள்.

10. **நானோ எனது சகோதரனோ பெறாது எனது சகோதரி மாத்திரம் பெற்ற பந்தின் நிறம் யாது?**
(1) சிவப்பு (2) நீலம் (3) ஊதா

11. **நாங்கள் மூவரும் பெற்ற பந்தின் நிறங்கள் எவை?**
(1) பச்சையும் வெள்ளையும் (2) நீலமும் பச்சையும் (3) சிவப்பும் ஊதாவும்

12. **குமாரைவிட லவன் ரூபாய் 30.00 குறைவாகப் பணம் வைத்திருக்கிறான். அவர்கள் இருவரிடமும் உள்ள மொத்தப் பணம் ரூபாய் 100.00 ஆகும். குமாரிடம் உள்ள பணம் யாது?**
(1) ரூபாய் 70.00 (2) ரூபாய் 65.00 (3) ரூபாய் 30.00


★ **குறியீடுகளின் பெறுமானங்களை இனங்கண்டு 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**



13. குறியீடு  இன் பெறுமானம் யாது? (1) 4 (2) 2 (3) 5

14. குறியீடு  இன் பெறுமானம் யாது? (1) 2 (2) 1 (3) 4

15. **இக்கோலத்தைப் பாருங்கள். இக்கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.**



(1) (2) (3)

16. **இந்த உருவில் -?- குறி இடப்பட்டுள்ள அடைப்புக்குப் பொருத்தமான பகுதியைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.**



(1) (2) (3)


★ ***பின்வரும் சொற்களை வாசித்து அதற்கேற்ப 17 ஆம், 18 ஆம் வினாக்களுக்கு விடை தருக.***

பள்ளி செல்லும் ......... #
பாடம் ஒன்று கற்றுக்கொள்
நல்ல சாலை 
நன்கு மனதில் வைத்துக்கொள்.


17. **# என்ற குறியீடு உள்ள இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**
(1) மாணவனே (2) பிள்ளையே (3) வழியிலே

18.  **என்ற குறியீடு உள்ள இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**
(1) வீதிகளை (2) விதிகளை (3) இடத்தில்


★ ***கீழே சில மரத்துண்டுகள் ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் வகையில் அமைந்து காணப்படுகின்றன. இதை அவதானித்து 19 ஆம், 20 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.***





19. **பக்கம் A யிலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டுகள் தோன்றும் விதத்தைத் தெரிவு செய்க.**




20. **பக்கம் B யிலிருந்து பார்க்கும்போது இந்த மரத்துண்டுகள் தோன்றும் விதத்தை தெரிவு செய்க.**



★ ***21 ஆம், 22 ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்து (?) வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவு செய்க.***

21. 


(1) 15 (2) 16 (3) 30

22. 


(1) 14 (2) 13 (3) 11

23. **கோயில் திருவிழாவுக்காக சிவப்பு, நீலம், பச்சை ஆகிய நிற மின்குமிழ்கள் இதே ஒழுங்கில் அலங்கரிக்கப்பட்டுள்ளன. 56 ஆவதாக அலங்கரிக்கப்பட்ட நிற மின்குமிழைத் தெரிவு செய்க.**
(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை

மீதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகில் பெற்றோலியம் பற்றிப் பரவலாகப் பேசப்படுவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருப்பது, மெக்ஸிகோ வளைகுடாவில் ஏற்பட்டுள்ள எண்ணெய்க் கசிவாகும். ஆழ்துளை இயந்திரங்கள் கொண்டு ஆழ்கடலுக்கடியில் பல்லாயிரம் அடிகள் ஆழத்தில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இந்த இயந்திரங்களில் ஒன்று கடந்த ஏப்ரல் 20 ஆம் திகதி வெடித்தமையால், எண்ணெய்க் கசிவு ஏற்படத் தொடங்கியது. தினமும் 1000 முதல் 5000 வரையிலான பரல்கள் கடலில் கலப்பதாக ஆரம்பத்தில் கூறப்பட்டாலும், இறுதியாகக் கிடைத்த செய்திகளின்படி, நாளொன்றுக்கு ஒரு லட்சம் பரல்கள் கொண்ட எண்ணெய் கடலோடு கலப்பதாக அறிய முடிகின்றது. இதனால், மெக்ஸிகோ வளைகுடாக் கடலும் கடற் சுற்றாடலும் அதிகளவில் மாசுபட்டுக் கொண்டிருக்கின்றன.

# பெற்றோலிய வளம் வந்ததெப்படி?

## மாற்று எரிபொருள் கண்டறிவு



எதிர்காலத்தில் பெற்றோலிய வளம் முற்றாகத் தீர்ந்து போகலாமென்று விஞ்ஞானிகள் எதிர்வு கூறியிருப்பதால், மாற்று எரிபொருள் அல்லது சக்தி மூலங்களைக் கண்டுபிடிப்பதில் நாடுகள் பல ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. அண்மைக்காலத்தில் தாவர எண்ணெய் வகைகளை எரிபொருளாகப் பயன்படுத்தும் முயற்சியில் ஓரளவு வெற்றி காணப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஜேர்மனியில் தாவர எண்ணெய் எரிபொருள்கொண்டு விமானமொன்று இயக்கப்பட்டதாகவும் மோட்டார் வாகனங்கள் அதில் இயங்குவதாகவும் கூறப்படுகின்றது. கோதுமை, நெல், சோளத்திலிருந்து எரிபொருள் உண்டாக்கும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. அத்துடன், இந்தியா மூலிகைப் பெற்றோலை உண்டாக்குவதில் கூடிய கவனம் செலுத்தி வருவதாகவும் அறிய முடிகின்றது. இவற்றுக்கு சிலவகை மரங்களும் வேர்களும் பயன்படுத்தப்படவுள்ளன.



## பெற்றோலியம் என்பது

பெற்றோலியம் என்பது நிலத்துக்குக் கீழ் இயற்கையாகக் காணப்படுகின்ற எண்ணெய்த் தன்மையான திரவமாகும். இதனை சுத்திகரிக்கப்படாத எண்ணெய் (Crude Oil) எனவும் அழைப்பர். பெற்றோலியம் என்றால் 'பாறை எண்ணெய்' என்பது பொருளாகும். அதாவது, 'Petre' என்றால் 'பாறை' என்றும், 'Oleum' என்றால் 'எண்ணெய்' என்றும் அதனைப் பிரித்துக் கூறலாம்.

பெற்றோலியம் பெரும்பாலும் காபனையும் ஐதரசனையும் கொண்ட ஐதரசக் காபன்களாகும். சுத்திகரிக்கப்படாத பெற்றோலியமானது பராபின், நப்தீன் மற்றும் இரண்டினதும் கலப்பு என்று மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோல் என்று நாம் அழைக்கின்ற திரவ எரிபொருளை அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் 'Gasoline' என்றே அழைக்கின்றன. சுருக்கமாக இதனை 'Gas' என்று அவர்கள் அழைப்பர். ஆனால், நம் நாட்டில் Gas என்றால் சமையலின்போது பயன்படும் 'எரிவாயு' என்றே கொள்ளப்படுகின்றது.

## முதலாவது எண்ணெய்க் கிணறு

பெற்றோல் பெறப்படும் நோக்கில், முதலாவது எண்ணெய்க் கிணறு 1857-1859 காலப்பகுதியில் ஜேர்மனி நாட்டில் தோண்டப்பட்டாலும் 1859 இல் அமெரிக்காவின் பென்ஸில்வேனியா மாநிலத்தில் ஒயில்கிரீக் என்ற இடத்துக்கருகில் எட்வின் ட்ரேக் என்பவர் தோண்டிய எண்ணெய்க் கிணறே முதலாவது எண்ணெய்க் கிணறாகக் கொள்ளப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட பெற்றோலிய வளத்தைக் கண்டுபிடிக்கும் துரித வேலைத்திட்டங்களினால் ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா,சவூதி அரேபியா, ஈரான், ஈராக், வெனிசுவெலா, கெனடா, நைஜீரியா, அங்கோலா, குவைட் போன்ற நாடுகளில் எண்ணெய்க் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன், அந்நாடுகள் பெற்றோலிய வளம்மிக்க நாடுகளாக மாறின. நமது நாட்டிலும் மன்னார்ப் பகுதியில் எண்ணெய் வளமிருப்பதாகக் கூறப்படுகின்றது.

## உருவாக்கம்

கடல்வாழ் உயிரினங்களும் கடலைச் சென்றடையும் தாவரப்பகுதிகள் மற்றும் கழிவுகளும் கடல் தன்ரக்கடியில் சென்று சிதைவடைந்து பல்லாயிரம் வருடங்கள் தேங்கிக் கிடப்பதாலேயே பெற்றோலியம் உருவாவதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான இந்த தொடர் செயற்பாட்டு முறையானது இன்றளவிலும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது.

சிதைவுகள், படிவுகள் என்பன அவற்றின் நிறை காரணமாக கடற்றரையினுள் அமிழ்ந்துகொண்டே போகும். புதிய படிவுகள் அதன்மேல் படியும்போது கீழ்ப்படையின் அமுக்கம் பல்லாயிரம் மடங்கு அதிகரிக்கும். அத்தோடு, அவற்றின் வெப்பநிலையும் பலநூறு பாகைகளாக உயரும். இந்நிலையில் சேறும் மணலும் கற்பாறைகளாக இறுகும்போது, விலங்குகளின் ஓடுகள் சுண்ணாம்புப் பாறைகளாக மாற, இறந்த உயிரினங்களின் பாகங்கள் எண்ணெய்யாகவும் இயற்கை வாயுவாகவும் மாற்றமடையும். எண்ணெய்யாக மாற்றமடைந்த சிதைவுகள் திரவ நிலையில் மேலெழும்பத் தொடங்கும்போது, பாறைகளால் தடுத்து நிறுத்தப்படுவதனால், ஓரிடத்தில் அவை ஒன்று சேர்கின்றன. இவ்வாறு [illegible] மிதமான அமுக்கத்தையும் மீறி பாறைகளுக்கூடாக கடலுக்குள் அல்லது தரைமீது கசியத் தொடங்கும்.


எரிபொருள் தாங்கிகள்


எண்ணெய் அகழ்வு

## எரிபொருள் பயன்பாடு

ஆரம்பத்தில் அவ்வாறான எண்ணெய்ப் படிவுகள் கசிந்த தரைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அங்கு கிடைத்த எண்ணெய்யை தீப்பந்தங்களை எரிக்கவும் மரத்தோணிகளில் நீர்க் காப்புச் செய்யவும் உடலில் ஏற்படும் நோவுகளுக்குப் பூசவும் பயன்படுத்தினர்.

தொடர்ந்து வந்த கைத்தொழில் புரட்சியும் மோட்டார் வாகனக் கண்டுபிடிப்பும் எரிபொருள் தேடலுக்கு வழிவகுத்தது. பெற்றோலிய வளம் கண்டுபிடிக்கப்படாத காலகட்டத்தில் திமிங்கில எண்ணெய், மிருகக் கொழுப்பு, எண்ணெய்த் தன்மைகொண்ட மரவிதைகள் என்பவற்றைப் பயன்படுத்தியே தமது வசிப்பிடங்களில் இரவு நேரத்தில் மக்கள் வெளிச்சத்தை ஏற்படுத்திக் கொண்டனர். இவை எரிகின்ற போது ஏற்படும் துர்நாற்றமும் இவற்றைத் தேடிக்கொள்வதிலுள்ள சிரமமுமே பெற்றோலிய எண்ணெய்க்கான தேடலைத் தூண்டுவதற்கு காரணமாக அமைந்தது எனலாம்.


எண்ணெய்க் கிணறு

தரையில் கசிந்த எண்ணெய்யை மண்ணெண்ணெய்யாகப் பிரித்தெடுக்கும் முறையை 1852 ஆம் ஆண்டில் கெனடா நாட்டைச் சேர்ந்த வைத்தியரும் புவியியலாளருமான அப்ரஹாம் கெஸ்னர் (Abraham Gessner) கண்டறிந்தார். 1855 இல் அமெரிக்கா ரசாயனவியலாளர் பெற்றோலியத்தைப் பிரித்தெடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பெற்றோலியப் பொருட்கள் எவை என்பது பற்றிய அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்ததன் பின்னரே எண்ணெய்க் கிணறுகள் தோண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக அறியமுடிகின்றது. எண்ணெய்க் கிணறுகள் பெரும்பாலும் கடலுக்கடியிலுள்ள தரையிலும் கடலோரத்திலும் தோண்டப்படுகின்றன.


பெற்றோலிய தயாரிப்புகள் சில

எண்ணெய்க் கிணறுகளிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத கருமை நிற எண்ணெய் (Crude Oil) சுத்திகரிப்பு ஆலைகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, வெப்பப் பிளப்பு (Thermal cracking) செயல்முறை மூலம் பெற்றோலியக் கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

எண்ணெய் சுத்திகரிப்பின் மூலம் எரிபொருள் வாயு, பெற்றோல், டீசல், ஜெட் எண்ணெய், மண்ணெண்ணெய், மசகு எண்ணெய், வெஸ்லின், கிறீஸ், மெழுகு, தார் முதலியன பெறப்படுகின்றன. மதுசாரம், மருந்துகள், செயற்கை றப்பர், பசளை, நைலோன், பிளாஸ்டிக், வண்ணப்பூச்சு, பொலியேஸ்டர், வெடிமருந்து, சாயங்கள் போன்ற தயாரிப்புக்களுக்கு மூலப்பொருளாகவும் பெற்றோலியம் காணப்படுகின்றது.

-ஐ.ஏ.ஸத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக சனத்தொகை

**1987 ஆம் ஆண்டு உலக சனத்தொகையானது 5 பில்லியனாக அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டதை அடுத்து, 1989 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் ஜூலை 11 ஆம் திகதி 'உலக சனத்தொகை தினம்' (World Population Day) ஆக அனுஷ்டிக்கப்பட்டு வரலாயிற்று**

சனத்தொகை பெருக்கத்தின் தீமைகளையும் சிறு குடும்பநெறியின் நன்மைகளையும் எடுத்துரைப்பது இந்த தினத்தின் முக்கிய நோக்கமாகும். தவிர, இத்தினத்தில் உலக மக்களின் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அதற்கான தீர்வுகள் குறித்தும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் ஈடுபடுகின்றது.

| குறைந்த சனத்தொகையைக்கொண்ட 10 நாடுகள் (2008 நடுப்பகுதியிலிருந்து) | |
|---|---|
| நாடு | மக்கள் தொகை |
| 01. பிட்கேய்ன் தீவுகள் | 50 |
| 02. வத்திக்கான் | 800 |
| 03. டொகேலோ | 1200 |
| 04. நியூ | 1500 |
| 05. ஃபோக்லண்ட் தீவுகள் | 3000 |
| 06. சென்.ஹெலெனா | 4500 |
| 07. மொன்செரட் | 5900 |
| 08. நௌரு | 10,000 |
| 09. டுவலூ | 10,000 |
| 10. எங்கில்லா | 15,000 |

| அதிக மக்கள் வாழும் முதல் 10 நாடுகள் (2010 ஜூன் வரை) | |
|---|---|
| நாடு | மக்கள் தொகை |
| 01. மக்கள் சீனக் குடியரசு | 1,338,350,000 |
| 02. இந்தியா | 1,182,540,000 |
| 03. ஐக்கிய அமெரிக்கா | 309,612,000 |
| 04. இந்தோனேஷியா | 231,369,500 |
| 05. பிரேசில் | 193,123,000 |
| 06. பாகிஸ்தான் | 169,877,500 |
| 07. பங்களாதேஷ் | 162,221,000 (2009 இல்) |
| 08. நைஜீரியா | 154,729,000 |
| 09. ரஷ்யா | 141,927,297 (2010, ஜனவரி) |
| 10. ஜப்பான் | 127,530,000 (2009, டிசம்பர்) |

## உலக சனத்தொகை வளர்ச்சி

பிறப்பு மற்றும் இறப்பு வீதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள சனத்தொகை கடிகார (World Population Clock) மதிப்பீட்டின்படி, 2009 ஜூலை 10 ஆம் திகதி வரையில் உலகின் சனத்தொகை 6.76 பில்லியன் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதுவே, 2010 ஜூலை 2ஆம் திகதியளவில் 6,853,277,050 என மதிப்பிடப்பட்டுள்ளது.மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது ஆண்டுதோறும் 1.31 வீதத்தால் அதிகரித்து வருகின்றது. இது சராசரியாக ஒவ்வொரு செக்கனுக்கும் 2.582 வீதமாகவும் நிமிடத்திற்கு 150 பேர், மணிக்கு 9000 பேர், நாளைக்கு 2,160,000 பேர் என்ற வேகத்தில் வருடத்துக்கு 81,430,910 என்ற தொகையில் அதிகரித்து வருவதாக மதிப்பீட்டின் பிரகாரம் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து, 2012 ஆம் ஆண்டளவில் 7 பில்லியனாகவும் 2020 ஆம் ஆண்டில் 7.6 பில்லியனாகவும் 2030 ஆம் ஆண்டில் 8.2 பில்லியனாகவும் 2040 ஆம் ஆண்டில் 8.8 பில்லியனாகவும் 2050 ஆம் ஆண்டாகும்போது உலக சனத்தொகையானது 9.2 பில்லியனாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## சனத்தொகை அதிகரிப்பை எதிர்கொள்ளும் நாடுகள்

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேஷ், நைஜீரியா போன்றன அதிக சனத்தொகையுடைய நாடுகளாக இனங்காணப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகில் சனத்தொகை குறைவான இடங்கள்

**1. பாலைவனப் பிரதேசங்கள்:** (உ+ம்) சஹாரா, கலகாரி, அட்டகாமா, பற்றகோனியா, தார்,கோபி, அரேபியா உள்ளிட்ட பல பாலைவனப் பிரதேசங்கள்.

**2. துருவப் பிரதேசங்கள்:**

**3. உயர்ந்தமலைப் பிரதேசங்கள்:** (உ+ம்) தென் அமெரிக்காவின் 'அந்தீஸ்' மலைப் பிரதேசம், வட அமெரிக்காவின் 'றொக்கி' மலைப்பிரதேசம், ஐரோப்பாவின் 'அல்ப்ஸ்' மலை, ஆசியாவின் இமயமலை, அற்லஸ் மலைப்பிரதேசங்கள்.

**4. அடர்ந்த காட்டுப் பிரதேசங்கள்:** (உ+ம்) தென் அமெரிக்காவின் 'அமேசன்' காடுகள், ரஷ்யாவின் 'சைபீரியன்' காடுகள், ஆபிரிக்காவின் 'கொங்கோ' காடுகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

## சனத்தொகை கணக்கெடுப்பின் அவசியம்

உலக சனத்தொகைக் கணக்கெடுப்பானது உலகளவில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. அது ஒரு நாட்டின் சனத்தொகையையும் சார்ந்திருக்கின்றது. ஒரு நாட்டில் வாழும் சனத்தொகையின் மதிப்பீட்டை அடிப்படையாகக்கொண்டே பெரும்பாலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாட்டின் அபிவிருத்தி, உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.


யேசு கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 4,000 வருடங்களுக்கு முன்பிருந்தே சனத்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. மத்திய கிழக்குப் பிரதேசத்தின் பெபிலோனியாவில் மக்களின் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பே உலகின் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பாகக் கருதப்படுகிறது.

# தினம்

# ல 11



சனத்தொகையின் அடிப்படையில் நாடுகள்



## சனத்தொகை பெருக்கத்திற்கான காரணங்கள்

1. பிறப்பு வீதம் அதிகரிப்பு, இறப்பு வீதம் குறைவு.

பொதுவாக இறப்பு வீதத்தைவிட பிறப்பு வீதம் அதிகமாகக் காணப்படுவதே குடித்தொகைப் பெருக்கத்திற்கான காரணமெனலாம். ஆனால், நவீன காலத்தில் மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பெருமளவுக்கு இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது.

2. உலகக் குடிப்பரம்பல்.

**'மத்திய கிழக்குப் பிரதேசத்தின் பெபிலோனியாவில் மக்களின் வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு நடத்தப்பட்ட கணக்கெடுப்பே உலகின் முதலாவது சனத்தொகை கணக்கெடுப்பாகக் கருதப்படுகிறது'**

3. வேலையில்லாப் பிரச்சினை.
4. போர் சூழல், பாலியல் பலாத்காரம்.
5. நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சி.
6. மக்களின் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்ட மேம்பாடு.
7. தொற்றுநோய்கள், இயற்கைப் பேரழிவுகள் போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் கிடைத்த வெற்றி.
8. சுற்றுச் சூழல் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வு.

## மக்கள் பெருக்கத்தினால் ஏற்படும் பாதிப்புகள்

சனத்தொகைப் பெருக்கத்தினால் உணவுப் பற்றாக்குறை, சூழல் மாசடைதல், சமூகச் சீர்கேடுகள், சுகாதாரப் பிரச்சினைகள், வேலையின்மை, போக்குவரத்து நெரிசல், நிலப்பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி போன்றன முக்கிய பிரச்சினைகளாக இனங்காணப்பட்டுள்ளன. தவிர,

* வறுமை உச்ச நிலையை அடையும்.
* நாடுகளின் பொருளாதார வளர்ச்சி குறைவடையும்.
* நீர், சுகாதார சேவை, மனை நிர்வாகம் உள்ளிட்ட பல விடயங்களில் பெரும் பிரச்சினைகள் ஏற்படும்.
* ஏழைகளுக்கு வீடுகள் இல்லாமல் போவதால் சேரிகள் உருவாகும்.
* குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோரின் பாதுகாப்பற்ற நிலை அவர்களை அடக்குமுறைக்கும் உட்படுத்துவதோடு, பல்வேறு சமூக குற்றச்செயல்கள் அதிகரிக்கும் வாய்ப்பும் ஏற்படும்.

## 2010 தொனிப்பொருள்

ஒவ்வொரு வருடமும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியமானது உலக சனத்தொகை தினத்தை பல்வேறு தொனிப்பொருள்களின்கீழ் அனுஷ்டித்து வருகின்றது. அதன்படி, இவ்வருடத்தின் தொனிப்பொருள் 'ஒவ்வொருவரையும் கணிப்பிடுதல்' (Everyone Counts) என்பதாகும். அபிவிருத்தியில் சனத்தொகைக் கணிப்பீடு எந்தளவு பங்களிப்புச் செய்கின்றது என்பதையே இது குறிக்கின்றது.

## UNFPA United Nations Population Fund — ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் செயற்பாடுகள்

* உலகில் சகல இடங்களிலும் வாழும் பெண், ஆண், சிறுவர் உரிமைகளை எவ்வித பாகுபாடின்றிப் பாதுகாத்தல், சுகாதார வளங்களை சரி சமமாக அனுபவித்து வாழும் சந்தர்ப்பத்தை உருவாக்குதல்.
* அவ்வவ் நாடுகளுக்கு உரித்தான முறையில் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.
* வறுமையை ஒழிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
* தனிநபர் வாழ்க்கையை வெற்றிகரமாக்க உதவுதல்.
* 2015 இல் அடிப்படைக் கல்வியை பூரணப்படுத்தல். கல்வியில் சம வாய்ப்பை வழங்கல். கல்வி கற்பதற்கான உரிமையை நிலைநாட்டல்.
* 2015 க்குள் கர்ப்பிணித் தாய் மரணத்தை 75% வரை குறைப்பதோடு, சிசு மரண வீதத்தையும் குறைத்து எதிர்பார்க்கும் ஆயுட்காலத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளல் போன்றன இதன் அடிப்படை நோக்கங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா போட்ட கோல்



விநாயகத்திற்கு மறதி அதிகம். ஊரார் அவரை மறதி மாமாவென்று அழைப்பதால் அவரது உண்மைப் பெயர் ஒரு சிலருக்குத்தான் தெரியும்.

ஒரு நாள் மாலை நேரம் மாமா விளையாட்டு மைதானப் பக்கம் வந்தபோது சிறுவர்கள் கால்பந்து விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். அப்போது மாமாவுக்கும் விளையாட வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது. இதனால், ஒரு குழுவினருடன் சேர்ந்து விளையாடினார் மறதி மாமா. சிறிது நேரம் விளையாடிய அவர் அங்கு வந்த தனது நண்பருடன் பேசிவிட்டு மீண்டும் வந்து விளையாடலானார்.

ஒரு கோல் போடப்பட்டது. கோல் போட்டவர் மாமாதான். சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார் மாமா. சிறுவர்களுக்கோ பெரிய தடுமாற்றம். காரணம் மாமா கோல் போட்டது அவர்களது அணியின் வளையில்தான். போடப்பட்ட கோல் எந்த அணிக்கென்று அங்கு சிறுவர்களிடம் பெரிய சண்டை ஏற்பட்டுவிட்டது. கோபம் கொண்ட சிறுவர்கள் மாமாவிடம் "ஏன் அப்படி நடந்து கொண்டீர்கள்?" என வினவியதற்கு "ஐயோ பிள்ளைகளே! எனது குழு எதுவென்று மறந்துவிட்டேன். அதுதான் இந்த வளையில் கோல் போட்டுவிட்டேன்" என்றார். சிறுவர்களுக்கு அழுவதா? சிரிப்பதா எனப் புரியவில்லை.

எம்.என்.எஃப்.சுமையா,
தரம் - 9,தும்மளதெனிய மு.வித்.,
வரக்காப்பொளை.

# தேர் வருது!



தேர் வருது! தேர் வருது!
தெருவோடு தேர் வருது!
பார் புகழத் தேர் வருது!
பரவசமாய் தேர் வருது!

அசைந்து அசைந்து தேர் வருது!
அழகு அழகாய் தேர் வருது!
சிறுவர் மகிழத் தேர் வருது!
பெரியோர் வணங்கிடத் தேர் வருது!

குஞ்சம் குலுங்கிடத் தேர் வருது!
குமரியர் களித்திடத் தேர் வருது!
கொஞ்சி மகிழ்ந்திடத் தேர் வருது!
குவலயம் போற்றத் தேர் வருது!

யானைகள் அசையத் தேர் வருது!
அனைவரும் போற்றத் தேர் வருது!
ஆனை முகத்தவன் தேர் வருது!
ஆண்டவன் தேரும் பின் வருது!
காணக் கண்கள் கோடி வேண்டும்!
கண்டு கண்டு வணங்கிட வேண்டும்!

# வெற்றியும் தோல்வியும்



வெற்றி பெறுபவர்களைக் கண்டு, உலகமே உவகை கொள்கின்றது. தோல்வி அடைபவர்களைக் கண்டு இந்த உலகமே நகைக்கிறது. அதனால்தான், உளவியலாளர்கள், "வெற்றியாளனை உலகம் கண்டுகொள்கின்றது. தோல்வியாளன் தன்னையே கண்டுகொள்கிறான்" என்றனர்.

முதல் முயற்சி தோல்வியாகலாம். மறு முயற்சி மாபெரும் வெற்றியாகலாமல்லவா? தோல்விக்கான காரணம் எம்மில்தான் இருக்கிறது. அதனைத் தேடி நீக்கும் வழிவகைகளை கையாள்வதன் மூலம், குறைகள் நீக்கப்பட்டு மறு முயற்சிகள் தொடரப்படலாம் என்பது உறுதி. வெற்றி ஒரு செயலால் மாத்திரம் தங்கியிருப்பதில்லை. அந்தச் செயலை செய்யும் நபரில் தான் தங்கியிருக்கின்றது.

தோல்விகள் மனிதனை வைரங்களாக மாற்றும் பட்டறைகள், வெற்றிகள் மனித முயற்சிக்கு கிடைக்கும் கூலிகள் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒரு வெற்றி மனிதனை அடையும் போது, அதற்கான உவகை அவன் உள்ளத்தில் உதிக்கிறது. ஆனால், ஒரு தோல்வி உள்ளத்தை உலுக்கி மீண்டுமொரு முறை அச்செயலைச் செய்ய ஊக்குவிக்கிறது.

இன்று அடையும் வெற்றிகள் நாளைய துக்கத்தின் விதைகளாக ஆக்கப்படுமேயானால்... அவ்வெற்றியால் எவ்வித பயனுமில்லை. இன்றைய தோல்விகள் நாளைய வெற்றியாக மாறுமேயானால், தோல்வியாளன் தோல்வியாளனே அல்ல!

பாயிகா அபூபக்கர், பேருவளை.

# விடுகதைகள்




1. நீலநிற மேடையில் கோடி மலர்கள். அவை என்ன?
2. ஓடையில் ஓடாத நீர்; ஒருவரும் அருந்தாத நீர். அது என்ன?
3. சுனை ஒன்று; வழி மூன்று. அது என்ன?
4. மலராத பூ அது என்ன பூ?
5. கொளுத்திய பின் கோடிக் கும்பிடு. அது என்ன?
6. கற்றவர் மனதை மயக்கிடும் கலைமகள். அவள் யார்?
7. கறியும் சோறும் ஆக்கியிருக்கு. இலையை எடுத்துவிட்டு உண்ணவேண்டும். அது என்ன?
8. கோணல் எத்தனை இருந்தாலும் குணமும் ருசியும் மாறாது. அது என்ன?

**விடைகள்**

*1. வானம், நட்சத்திரம்*
*2. கண்ணீர்*
*3. தேங்காய்*
*4. வாழைப்பூ*
*5. கற்பூரம்*
*6. புத்தகம்*
*7. கறிவேப்பிலை*
*8. கரும்பு*

# யாருடைய பேனா?

அன்று கீதாவின் பிறந்தநாள். அவளுக்கு காலையிலேயே அதிகமான பரிசுகள் கிடைத்துவிட்டன. அதில் அவளுடைய அக்கா கொடுத்த ஊதா நிறப் பேனா கீதாவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் அதனை தன் நண்பிகளுக்கு காட்ட பாடசாலைக்குக் கொண்டு சென்றாள்.

இடைவேளையின்போது, கீதா தன் நண்பிகளுக்கு அந்தப் பேனாவைக் காட்டினாள். இடைவேளையின் பின்னர் அனைவரும் பாடத்திற்கு ஆயத்தமாகினர். அப்போது பைக்குள் பேனாவை எடுக்க கையை நுழைத்த கீதாவுக்கு பகீர் என்றது. பேனாவைக் காணவில்லை. பேனாவைக் காணாததால் கீதா அழத்தொடங்கிவிட்டாள்.



வகுப்பாசிரியர் வரவே மாணவிகள் அவரிடம் விடயத்தைத் தெரிவித்தனர். அனைவருடைய பைகளும் சோதனை செய்யப்பட்டபோது, குமுதினி என்னும் மாணவியின் பையில் பேனா இருந்தது.

உடனே குமுதினி "இல்லை இல்லை. இது என்னுடைய பேனா. எனக்கு என் அக்கா கொடுத்தது. நாளை இங்கு என் அக்காவை அழைத்து வருகிறேன். அவரிடம் கேளுங்கள்" என்று கூறினாள். ஆசிரியர் அந்தப் பேனா மூடியில் சிவப்பு அடையாளமிட்டு அதனை மறைத்து வைத்துக் கொண்டார்.

மறுநாள் குமுதினி தன் அக்காவை அழைத்து வந்தாள். ஆசிரியர் அவளின் அக்காவிடம் பேனா யாருடையது என்று வினவ அவளும் தங்கை கூறியதுபோல் அது தான் கொடுத்ததுதான் என்று கூறினாள். மூடியின் முனையைக் காட்டி "இப்படி ஒரு சிவப்புப்புள்ளி உன் பேனாவில் இருந்ததா?" என ஆசிரியர் வினவ உடனே குமுதினி "ஆமாம். அதை நான்தான் வைத்தேன். பேனா காணாமல் போகாதிருக்க" என்றாள். அக்காவும் அதை தான் கண்டதாகவும் கூறினாள்.

இருவரதும் பொய்களையும் கேட்ட ஆசிரியர் தன் பிரம்பால் குமுதினியை அடித்ததோடு, அவள் அக்காவைக் கண்டித்து இதுபோல் இனி நடந்து கொண்டால் குமுதினியை பாடசாலையை விட்டு நீக்கிவிடுவதாகவும் எச்சரித்தார். தனது பிழையை உணர்ந்த குமுதினியின் அக்கா தலைகுனிந்தாள். தன் தங்கையின் தவறுக்கு நானும் உடந்தையாகி விட்டேனே என வெட்கப்பட்டவாறே வகுப்பில் இருந்து வெளியேறினாள்.

எம்.பீ.பாத்திமா ஸஃப்ரின்,
இ.சீ.சீ.த.ம.வித்., பலாங்கொடை.

# மார்ட்டின் விக்ரமசிங்க



இலங்கையின் அரும்புதல்வர்களில் ஒருவர்தான் நாவலாசிரியர் மார்ட்டின் விக்ரமசிங்க. இவர் 1890 ஆம் ஆண்டு மே 29 இல் தென்மாகாணத்தின் 'கொக்கல' எனுமிடத்தில் பிறந்தார். மார்ட்டின் ஆரம்பக் கல்வியை கிராமப் பன்சலையிலும் பின்னர் காலி பொனவிஸ்டா பாடசாலையிலும் கற்றார். 1904 இல் அஹங்கம சிங்களப் பாடசாலையில் கற்ற அவர்

பாடசாலையில் கற்கும்போதே சிறந்த குணங்களையும் திறமைகளையும் பெற்று விளங்கினார். அவரது திறமைகளைக் கண்ட ஆசிரியர்கள் அவரை உற்சாகப்படுத்தினர். பிற்காலத்தில் புகழ்பூத்ததோர் இலக்கியவாதியாகவும் சிங்கள மொழி வாசகர்களின் நண்பனாகவும் விளங்கியதோடு, அவருடைய இளமைக்கல்வியே இவற்றுக்குரிய அத்திவாரத்தை இட்டது என்றும் கூறலாம்.

மார்ட்டின் விக்ரமசிங்க, 1914 இல் எழுத்துத் துறைக்குள் நுழைந்ததுடன், சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் 40 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 20 நூல்கள் நாவல்களாகும். அவருடைய முதல் நாவலாக 'லீலா' எனும் நாவல் அமைந்தது. 'லீலா' என்ற இந்த நாவலை எழுதும்போது அவரது வயது 22 ஆகும். அத்துடன், இவரது 'கம்பெரலிய' எனும் நாவல் திரைப்படமாகவும் தயாரிக்கப் பட்டது.

சுதேச கலைகளையும் பண்பாட்டையும் தனது எழுத்தின் மூலம் வெளிக்காட்டிய மார்ட்டின் விக்ரமசிங்க அவர்களுக்கு இலங்கை இலக்கிய வரலாற்றில் மகத்தான இடமுண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியரின் அபாரத் திறமை






நான்கு தசாப்த காலத்துக்கு மேலாக தனது ஓவியங்கள் மூலம் ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தார் ஓர் ஓவியர். அமெரிக்காவின் மிகச் சிறந்த ஓவியர்களில் ஒருவரான நோர்மன் பெர்ஸ்வெல் ரொக்வெல் என்பவரே அவர்.

1894 ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி நியூயோர்க்கில் பிறந்த இவர் தனது 18 ஆவது வயதிலேயே அமெரிக்க சாரணர் இயக்க வெளியீடான போய்ஸ் லைப்பின் ஆசிரியரானார். அவரின் 22 ஆவது வயதில் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது. அவர் வரைந்த படம் 'த சட்டர்டே ஈவனிங்' (The Saturday Evening) எனும் சஞ்சிகையின் அட்டையில் இடம்பெற்றது. அதைத் தொடர்ந்து 47 வருடகாலம் அந்தப் பத்திரிகை நோர்மனின் 321 படங்களை அட்டையில் வெளியிட்டது. நோர்மனின் படங்கள் அட்டையில் இடம்பெற்ற போதேல்லாம் அப்பத்திரிகை 50 ஆயிரம் கூடுதல் பிரதிகள் விற்பனையாகினவாம். அந்த அளவுக்கு அவர் புகழ் பெற்றுத் திகழ்ந்தார்.

சாதாரண மக்களின் வாழ்க்கையை நோர்மன் ரசித்ததால் பொதுமக்கள் அவரது படங்களை மிகவும் விரும்பினர். அவரது பல படங்களில் குழந்தைகள் அதிகளவில் இடம் பெற்றிருக்கின்றன. அத்துடன், பலவற்றில் அவர் தன்னையும் சேர்த்துக்கொண்டிருக்கிறார்.

நோர்மன் திட்டமிட்டே படம் வரையத் தொடங்குவார். ஒரு படத்தை முடிப்பதற்குப் பல மாதங்கள் ஆகும். தனது படங்கள் துல்லியமாக இருப்பதற்கு, முதலில் தனது மொடல்களை பல்வேறு கோணங்களில் படம் எடுத்துக்கொள்வது நோர்மனின் வழக்கம். நோர்மனின் பக்கத்து வீட்டுக்காரர்களே பெரும்பாலும் அவரது மொடல்களாகி விடுவார்கள்.



நோர்மன் ஏறக்குறைய 4 ஆயிரம் படைப்புகளை உருவாக்கினார். 'நோ ஸ்விம்மிங்', 'த போர் பிரீடம்ஸ்', 'த கொசிப்ஸ்', 'ஆர்ட் கிரிட்டிங்' ஆகியவை நோர்மன் உருவாக்கிய பிரசித்தி பெற்ற படங்களில் சிலவாகும்.

ரொக்வெல் 1978 ஆம் ஆண்டு நொவெம்பர் 8 ஆம் திகதி தனது 84 ஆவது வயதில் காலமானார். அவருடைய இறுதிக் கிரியைகளில் அப்போதைய அமெரிக்க முதல் பெண்மணி ரொஸலின் கார்ட்டர் கலந்துகொண்டிருந்தார்.

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3649
க.கிறிஸ்ரீவன், தரம் - 3, மடுக்கரை அ.த.க.பாட., மன்னார்.


அங்.இல: 3650
ஜெ.சமீர கிருஷாந்தன், தரம் - 1B, புனித அந்தோனியார் ஆ.பாட., கண்டி.


அங்.இல: 3651
எம்.மிஹ்ரான், தரம் - 7D, டீ.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-08.


அங்.இல: 3652
கி.நிகத்திகா, தரம் - 8D, யா/சாவகச்சேரி இ.கல்., சாவகச்சேரி.


அங்.இல: 3653
எம்.சிரோஸ், தரம் - 9, மழ்ஹருஸ் ஸுல்ஹியா தே.பாட., காலி.


அங்.இல: 3654
எம்.நிஃப்ஹாஸ், தரம் - 2, வெலிதர மு.ம.வித்., காலி.


அங்.இல: 3655
சி.சஞ்ஜீவன், தரம் - 9F, யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3656
எம்.சாபி, தரம் - 7, ற.ஜ.அ.கல்., மூதூர்.


அங்.இல: 3657
எஃப்.அஸ்கா, தரம் - 8G, மின்ஹாத் தே.பாட., திக்குவல்லை.


அங்.இல: 3658
எம்.முபாப்ஷிர், தரம் - 8B, ஹமீத் அல்-ஹுசைனியா கல்., வெள்ளம்பிட்டிய.


அங்.இல: 3659
ஐ.அஃப்ரி அஹமட், தரம் - 6, அல்-மனார் தே.பாட., கண்டி.


அங்.இல: 3660
ந.சர்மிலன், உயர் தரம் (கணிதம்), த.ம.ம.வித்., வவுனியா.

# துஷாரா கலைவட்டம் - 2010

## எக்ரோன் அகில இலங்கை சித்திரப் போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப் போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்களும் நிபந்தனைகளும் கீழே தரப்பட்டுள்ளன.

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் ஆகியனவற்றில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்வொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கென்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின் அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron ஒயில் பெயின்ட் 15 போட்டியாளர்கள் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதம் | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron அதிவிசேட வெற்றியாளர்கள் 15 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட 100 சித்திரங்களை அனுப்பச் செய்கின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன் குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி 2010 ஜூலை 31.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704.

## துஷாரா கலைவட்டம்

THUSHARA KALA KAVAY A

Color CRAFT

அகில இலங்கை சித்திரப்போட்டி-2010

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex :
ஆண் Female ☐ பெண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

................................ ................................ ................................

போட்டியாளரின் கையொப்பம் — Applicant's Signature | திகதி — Date | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் — Parents/ Guardians Signature

பிரதான அனுசரணை: Acron COLSTAR
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக்கொண்ட பைசர்-ரம்சியா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா சபா, 30.06.2010 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளை வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



மட்டுவில்லைச் சேர்ந்த குமாரசாமி-செலவநாயகதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி சிந்தூரியா, 28.06.2010 அன்று தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.



அண்மையில், பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியில் '21ஆம் நூற்றாண்டின் ஊடகம்' எனும் தொனிப்பொருளின்கீழ் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தினால் முழுநாள் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது. இதன்போது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சட்டத்தரணி மர்சூம் மௌலானாவிடமிருந்து பாடசாலை மாணவர் நாடாளுமன்ற ஊடகத்துறை அமைச்சர் சபியா சித்தீக் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதையும் அருகில் மீடியா ஃபோரத்தின் தலைவர் அல்ஹாஜ் என்.எம்.அமீன் நிற்பதையும் படத்தில் காணலாம்.



வியாங்கல்லையைச் சேர்ந்த றுக்ஷான்-பஸ்னா தம்பதியரின் செல்வப் புதல்வன் மொஹமட் ஆகிஃப், 05.07.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர். (தகவல் - மஃபூர்)








அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ்.சிவா, தரம் - 7B,
பள்ளிவாசல்துறை மு.ம.வித்.,
பெரியசந்தி கிராமம்.



எஸ்.சல் சபீல், தரம் - 5,
அல்-முர்ஷித் ம.வித்., சில்மியாபுர.



நஸ்மா நஃபீல், தரம் - 8B,
அலிகார் ம.வித்., கல்-எளிய.



எம்.ரம்ஸீன், தரம் - 11B,
தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.



ரா.இவாஞ்ஜலின், தரம் - 10C,
புனித சிசிலியா ம.வித்.,
மட்டக்களப்பு.



உ.சர்மினி, தரம் - 6,
பாக்கியம் தே.கல்., மாத்தளை.




ஓவியம் ஒன்றை வரைவதில் ரேகைகள் எந்தளவு முக்கியத்துவம் பெறுகின்றன என்பதை கடந்த பயிற்சிகளினூடாக நீங்கள் அறிந்திருப்பீர்கள். அத்தகைய ரேகைகளைப் பயன்படுத்தி மேலும் இரு பயிற்சிகளை இப்போது செய்து பார்ப்போம்.

பயிற்சி - 1

## மாடு ஒன்றை வரைவோம்


அ. படத்திலுள்ளவாறு வட்டமொன்றை வரைக.

ஆ. முகத்தைப் பூரணப்படுத்த கண், காதுகள், கொம்புகள் என்பனவற்றை வரையுங்கள்.

இ. பின்னர் உடற்பகுதியை வரைக.


ஈ. கால்கள், வால் என்பனவற்றையும் வரைந்துகொள்ளவும்.

உ. தேவையான இடங்களில் தடிப்பான கோடுகளைப் பயன்படுத்தி மாட்டின் உருவத்தைப் பூரணப்படுத்துங்கள்.




பயிற்சி - 2

## கொக்கு ஒன்றை வரைவோம்




அ. படத்தில் காட்டிய வாறு சுருள்ரேகை ஒன்றை வரைந்துகொள்ளுங்கள்.

ஆ. அடுத்ததாக உடற்பகுதிகளை வரையுங்கள்.

இ. அலகு (சொண்டு) பகுதியை வரையுங்கள்.


ஈ. கால்களை வரையுங்கள்.

உ. தேவையற்ற கோடுகளை அழித்துவிட்டு, உருவத்தைப் பூரணப்படுத்துங்கள்.

(தொடரும்)



ஸுமையா பாரிஸ், தரம் - 7A,
அழுத்கம மு.பெ.தே. பாட., தர்கா நகர்.





எம்.சிப்னாஸ், தரம் - 1A,
கெகுணகொல்ல தே.பாட.,
கெகுணகொல்ல.



ஷஹ்னா சவாஹிர்,
தரம் - 7A, அல்-இர்ஃபான் மத்.கல்.,
பொல்கஹவெல.



ரஹீமா ரியாஸ்,
பாலர் வகுப்பு, அல்-ஹிலால் பாட.,
மாத்தளை.



எம்.அகீல், தரம் - 1,
அல்-அஷ்ரக் ம.வித்.,
தல்கஸ்பிடிய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை கொண்ட அரசருக்கு ஏற்பட்ட கதி!






வயதில் இளைய, அறிவில் மூத்த இவானை அழைத்து வரும்படி அரசர் கட்டளையிட்டார். அரசரின் கட்டளைக்கு ஏற்ப அங்கு வந்த இவான், ''அரசே, என்னை எதற்காக அழைத்து வரும்படி கட்டளையிட்டீர்கள்? எனது பயணத்திற்குப் பின்னர் நான் இன்னமும் ஓய்வுகூட எடுத்துக்கொள்ளவில்லை'' என்று இவான் கூறினான்.

''உன்னை நீண்ட நேரம் காக்க வைக்கமாட்டேன். இந்தக் கொப்பரைகளில் மூழ்கி எழுந்து, பின்னர் போய் ஓய்வு எடுத்துக்கொள்'' என்றார் அரசர்.

இவான் கொப்பரைகளைப் பார்த்தான். பாலுடனும் நீருடனும் இருந்த கொப்பரைகள் கொதித்துக் குமுறிக் கொண்டிருந்தன. மூன்றாவது கொப்பரையில் மட்டும் குளிர்ந்த நீர் அமைதியாகவும் குளுமையாகவும் இருந்தது.

''அரசே, என்னை அழிக்க விரும்புகிறீர்கள். அப்படித்தானே? எனது நம்பிக்கையான சேவைக்கு இதுவா உங்கள் பரிசு?'' என்றான்.

''இல்லை, இல்லை இவான் அதாவது, ஒரு முதியவன் இதில் மூழ்கி எழுந்தால் இருபது வயது இளைஞனைப் போல இளமையும் அழகும் மிக்கவனாக மாறுவானாம்''

''ஆனால், நான் முதியவன் இல்லையே அரசரே. மேலும் இளமை பெற வேண்டிய தேவையும் எனக்கு இல்லை'' என்றான்.

இதனால், அரசர் கோபமடைந்தார். ''என்னுடன் விவாதம் செய்ய நீ யார்? எப்போதும் நீ குறுக்கே பேசுகிறாய். நீயாக விரும்பி இதற்குள் குதிக்கவில்லை என்றால், காவலர்களை அழைத்து இதன் உள்ளே உன்னைத் தூக்கிப்போட வேண்டியிருக்கும்''

அந்நேரத்தில் பேரழகி இளவரசி அல்யோனா தனது அறையை விட்டு அங்கே ஓடிவந்தாள். அரசர் கவனிக்காதிருந்த சமயம் பார்த்து இவானிடம் கிசுகிசுத்தாள்; தங்கப் பிடரிமயிர் கொண்ட உனது குதிரையிடமும் கடற் குதிரைகளிடம் மூழ்குவதற்கு முன்னால் சொல்லிவிடு. பின்னர் நீ பயமின்றி இதில் மூழ்கலாம்''

அத்துடன், இளவரசி அல்யோனா அரசரிடம் கூறினாள்; நான் உங்களிடம் கூறியபடி, எல்லாம் தயாராக இருக்கிறதா என்று பார்க்கவந்தேன்'' கொப்பரைகளுக்கு அருகே சென்று உள்ளே உற்றுப் பார்த்தாள். ''எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே அனைத்தும் இருக்கின்றன. இப்போது இவற்றில் மூழ்கி எழும்புங்கள். மணவிழாவிற்குத் தயாராக நான் ஓடிவருகிறேன்'' என்றாள்.

பின்னர் தனது அறைக்குத் திரும்பினாள். வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் அரசரை நோக்கிக் கூறினான்; ''நல்லது. இறுதியாக தாங்கள் சொன்னது போலவே செய்கிறேன். ஒருவன் ஒரு முறைதான் சாகமுடியும். ஆகவே, தங்கப் பிடரிமயிர் கொண்ட பெண் குதிரையைப் பார்த்து வர என்னை அனுமதியுங்கள். அதை நான் பார்ப்பது இதுவே கடைசி முறையாகவும் இருக்கலாம்''

''நல்லது. நீ போய்வரலாம். ஆனால் அங்கே அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதே''

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் லாயத்துக்குச் சென்று தனது குதிரையிடமும் கடற் குதிரைகளிடமும் எல்லாவற்றையும் கூறினான். ''நாங்கள் மூன்று முறை கனைப்பதைக் கேட்டதும் அதற்குள் மூழ்கு, பயப்பட வேண்டாம்'' என்றன அவை.

இவான் அரசரிடம் திரும்பி வந்தான். ''அரசரே இப்போது நான் முற்றிலும் தயாராக இருக்கிறேன்'' என்றான்.

அந்நேரத்தில் குதிரைகள் மூன்று முறை கனைத்தன. இவான் முதலில் கொதிக்கும் பாலுக்குள் குதித்தான். பின்னர், வெந்நீருக்குள்ளும் இறுதியாக குளிர்ந்த நீரிலும் மூழ்கி எழுந்தான். மூன்றாவது கொப்பரையைவிட்டு எழும்போது மிகவும் அழகாகவும் கவர்ச்சியுடனும் வெளியே வந்தான்.

அதனைப் பார்த்த அரசருக்குப் பொறுக்க முடியவில்லை. உடனே மேடையின் மீது தொற்றி ஏறி கொதிக்கும் பாலுக்குள் குதித்து உயிரோடு வெந்து மடிந்தார்.

பேரழகி இளவரசி அல்யோனா முற்றத்திற்கு விரைந்து வந்து வயதில் இளைய, அறிவில் மூத்த இவானின் கைகளைப் பற்றியபடியே புன்முறுவல் செய்துவிட்டுக் கூறினாள்; ''அரசரின் கட்டளைப்படி நீ என்னைத் தூக்கி வந்தாய். ஆனால், இப்போது அவர் இறந்துவிட்டார். நீ விரும்பினால் என்னைத் திரும்ப அழைத்துச்சென்று என் தந்தையிடம் ஒப்படைக்கலாம். இல்லை என்றால் என்னை நீ முறைப்படி திருமணம் செய்துகொள்ளலாம்'' என்றாள்.

வயதில் இளைய, அறிவில் மூத்த இவான் அவளது வெண்ணிறக் கைகளைப் பற்றி தனது மோதிரத்தை அவளது விரலில் அணிவித்தான்.

அதன்பின்னர் தனது தாய், தந்தை மற்றும் சகோதரர்களை மணவிழாவிற்கு அழைப்பதற்காகத் தூதுவர்களைத் தனது கிராமத்திற்கு அனுப்பினான். வெகு விரைவிலேயே அவனது தாயும் தந்தையும் முப்பத்து இரண்டு சகோதரர்களும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள்.

அவர்களின் திருமணம் முடிந்ததும் மிகப்பெரிய விருந்து நடைபெற்றது. அதன் பின்னர் வயதில் இளைய, அறிவில் மூத்த இவானும் பேரழகி இளவரசி அல்யோனாவும் மகிழ்ச்சியோடு தமது பெற்றோர் சகோதரர்களுடன் இனிதே வாழ்ந்து வந்தார்கள்.

(முற்றும்)

# கனவு தந்த அறிவுரை

சுள்ளென்று அடிக்கும் வெயில், வறுத்தெடுக்கும் அனல் கோடைக்காலம். கைவண்டி நிறைய அரிசி மூடைகளை ஏற்றினான் பாலையா. வரிசை வரிசையாக அடுக்கப்பட்டன அரிசி மூடைகள். அரிசி மூடைகளை கடைவீதியில் இருந்த மற்றொரு சில்லறை விற்பனைக் கடையில் இறக்கி வைத்துவிட்டு வரவேண்டும்.இதுதான் பாலையாவின் வேலை.

பசி வயிற்றைக் கிள்ளியது. வயிறு முட்டச் சாப்பிட்டால் வண்டி இழுக்க கஷ்டமாக இருக்கும் என்பதால் சிறிதளவு உணவை மட்டும் காலையில் சாப்பிட்டிருந்தான்.

துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வண்டியை மிக லாவகமாக இழுத்தான் பாலையா. மூடைகள் பல இருந்ததால் வண்டியை இழுக்க சற்று சிரமமாகத்தான் இருந்தது. போக்குவரத்து நெரிசலைக் கடந்து வீதி வழியே கைவண்டியை இழுத்துக்கொண்டு வந்தபோது பாலையாவின் உடலெங்கும் வியர்வையால் நனைந்தது. தாகத்தால் நாக்கு வறண்டது.

இதனால், குளிர்பானக் கடை ஓரமாக பாலையா தனது வண்டியை நிறுத்தினான். குளிர்பானம் ஒன்றை வாங்கி குடித்துக்கொண்டிருந்தபோது வீதியைக் கடந்து சென்ற ஒரு சொகுசுக் கார் மீண்டும் பின்பக்கமாக வந்து அந்தக் கடையின் முன் நின்றது. காரிலிருந்து நாகரிகமாக உடை அணிந்த ஒருவர் இறங்கி வந்தார்.

குளிர்பானம் குடிக்கத்தான் வருகிறார் என பலரும் நினைத்துக்கொண்டிருக்க, வந்தவர் பாலையாவை நன்றாக உற்றுப் பார்த்தார். ''நீ பாலையா தானே?'' எனக் கேட்க, ''ஆமாம்'' என்ற பாலையா ''நீங்கள் யார்?'' என்று கேட்டான்.

''என்னைத் தெரியலையாடா, நான்தான் சாமிக்கண்ணு. நாம ரெண்டுபேரும் ஒண்ணா படிச்சோமே. உன் பக்கத்திலதானே நான் இருப்பேன்'' என்றார் அந்த மனிதர்.

''ஏய் சாமிக்கண்ணா நீ? எப்படி ஆளே மாறிப் போயிட்டே? எத்தனை வருஷமாச்சி உன்னப்பார்த்து'' என்றான்.

ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக்கொண்டு நலம் விசாரித்தார்கள். அழுக்குத் துணியோடு கை வண்டிக்காரர் இருக்கிறார் என நினைக்காமல் பகட்டாய் உடை அணிந்தவர் அவரைக் கட்டிப்பிடித்து அகமகிழ்ந்தது பார்ப்போரை பரவசப்படுத்தியது.

''சாமிக்கண்ணு, குளிர்பானம் குடிக்கிறாயா?'' என பாலையா கேட்க, ''உன் கையால் வாங்கிக்கொடு, குடிக்கிறேன்'' என கூறிக்கொண்டு இரண்டு பேரும் குளிர்பானம் குடித்தார்கள்.

''நாம ரெண்டு பேரும் பாடசாலை நாட்களில் இணை பிரியாத நண்பர்கள். உன்னை நான் நல்லாப் படி படி என்பேன். நீ அதைக் கேட்காமல் சரியாகப் படிக்காமல் போயிட்டே. அதனால் இப்ப கைவண்டி இழுத்துக் கஷ்டப்படுறே. என்னப்பாரு... நான் கஷ்டப்பட்டுப் படிச்சேன். இப்ப அரசாங்க உத்தியோகம், போய் வரக் கார் வசதி, கை நிறையச் சம்பளம். இதற்குத்தான் படிச்சுப் படிச்சு உன்னிடம் சொன்னேன், நல்லாப் படி படின்னு. ஆனா நீ கேட்கல. இனிமே வருத்தப்பட்டு என்ன செய்ய. உன் பிள்ளைகளையாவது நல்லாப் படிக்க வை'' என சாமிக்கண்ணு கூறினார்.



''நல்லா படிக்க வைப்பேன். நல்லா படிக்க வைப்பேன்'' என பாலையா மீண்டும் மீண்டும் சொல்ல, ''என்னடா பாலையா புலம்பறே, கனவு ஏதாச்சும் கண்டியா?'' என அம்மா கேட்க, சிரித்துக் கொண்டான் பாலையா.

'தான் கண்டதெல்லாம் வெறும் கனவா, அத்தனையும் நிஜம்போல் தெரிந்தது. நாமும் நண்பனைப் போல நல்லாப் படிக்கணும். நல்ல உத்தியோகம் பார்க்கணும்' என்பதை மட்டும் மறக்காமல் நினைவில் நிறுத்தினான் எட்டாம் வகுப்பில் படிக்கும் பாலையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்



250

## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் அக்காவுக்கும் தங்கைக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**නංගි:** අක්කේ අද අපි සීතා අක්කාගේ තෑගි ගන්න යනවාද?
அக்கே அத அபி சீதா அக்காகே தேகி கண்ண யனவாத?
தங்கை: அக்கா நாங்கள் இன்று சீதா அக்காவுக்கான அன்பளிப்பை வாங்கப் போகிறோமா?

**අක්කා:** ඔව් නංගි. අපි හවස යමු.
ஒவ் நங்கி. அபி ஹவஸ யமு.
அக்கா: ஆம் தங்கச்சி. நாங்கள் பின்னேரம் போவோம்.

**නංගි:** හවස කීයට විතරද අක්කේ?
ஹவஸ கீயட விதரத அக்கே?
தங்கை: பின்னேரம் எத்தனை மணிக்கு அக்கா?

**අක්කා:** සවස හතරට විතර යමු. අද ඔයාට පන්තිනේද?
சவஸ ஹதரட விதர யமு. அத ஒயாட பந்திநேத?
அக்கா: பின்னேரம் நான்கு மணியளவில் போவோம். இன்று உங்களுக்கு வகுப்புத்தானே.

**නංගි:** අද නැහැ අක්කේ. හෙට තියෙන්නේ.
அத நெஹெ அக்கே. ஹெட தியென்னே.
தங்கை: இன்று இல்லை அக்கா. நாளைக்கு இருக்கிறது.

**නංගි:** අපි ටවුමට යන්නේ කොහොමද අක්කේ?
அபி டவுமட யன்னே கொஹொமத அக்கே?
தங்கை: நாங்கள் எப்படி நகரத்துக்குப் போகிறோம் அக்கா?

**අක්කා:** අපි ත්‍රීවීලරයකින් යමු.
அபி த்ரீவீலரயகின் யமு.
அக்கா: நாங்கள் முச்சக்கரவண்டியில் போவோம்.

**නංගි:** ඔයා ත්‍රීවීලරයකට එන්න කිව්වද?
ஒயா த்ரீவீலயகட என்ன கிவ்வத?
தங்கை: நீங்கள் முச்சக்கரவண்டியை வரச் சொன்னீர்களா?

**අක්කා:** නැහැ නංගි කියන්න ඕනේ.
நெஹெ நங்கி கியன்ன ஓனே.
அக்கா: இல்லை தங்கச்சி சொல்ல வேண்டும்.

**නංගි:** හා... අක්කේ. මම හතරට ලැහැස්තිවෙලා ඉන්නම්.
ஹா... அக்கே. மம ஹதரட லெஹெஸ்திவெலா இன்னம்.
தங்கை: ஹா... அக்கா. நான் நான்கு மணிக்கு ஆயத்தமாகி இருக்கின்றேன்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* நாங்கள் இன்று சீதா அக்காவுக்கான அன்பளிப்பை வாங்கப் போகிறோமா?
**අද අපි සීතා අක්කාගේ තෑගි ගන්න යනවද?**



i. சவஸ ஹதரட விதர யமு.
.......................................................................

ii. த்ரீவீலயகட என்ன கிவ்வத?
.......................................................................

iii. மம ஹதரட லெஹெஸ்திவெலா இன்னம்.
.......................................................................




**Will** (வினைச்சொல்) சகிதம் மூல வினைச்சொல்லைக் (Stem Verb) கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால வினா வாக்கியங்கள் மற்றும் **going to** (வினைச்சொல்) சகிதம் மூல வினைச்சொல்லைக் கையாண்டு அமைக்கப்படுகின்ற எதிர்கால வினா வாக்கியங்கள் ஆகியவற்றுடன் **What, When, How, Where** முதலான வினாச்சொற்களைக் கையாளும்போது, அவ்வினா வாக்கியங்கள் பின்வருமாறு அமைகின்றன.



(அ) What will you do tomorrow?
நீ நாளை என்ன செய்வாய்?

(ஆ) What are you going to do tomorrow?
நீ நாளை என்ன செய்யப் போகின்றாய்?

(இ) What will you buy for dinner?
நீ இரவு உணவுக்கு என்ன வாங்குவாய்?

(ஈ) What are you going to buy for dinner?
நீ இரவு உணவுக்கு என்ன வாங்கப் போகின்றாய்?

(உ) What will you tell him?
நீ அவனுக்கு என்ன சொல்வாய்?

(ஊ) What are you going to tell him?
நீ அவனுக்கு என்ன சொல்லப் போகின்றாய்?

(எ) What will you cook for dinner?
நீ இரவு உணவுக்கு என்ன சமைப்பாய்?

(ஏ) What are you going to cook for dinner?
நீ இரவு உணவுக்கு என்ன சமைக்கப் போகின்றாய்?

---



(அ) What will you give him?
நீ அவனுக்கு என்ன கொடுப்பாய்?

(ஆ) What are you going to give him?
நீ அவனுக்கு என்ன கொடுக்கப் போகின்றாய்?

(இ) What will you eat for lunch?
நீ பகலுணவுக்கு என்ன சாப்பிடுவாய்?

(ஈ) What are you going to eat for lunch?
நீ பகலுணவுக்கு என்ன சாப்பிடப் போகின்றாய்?

(உ) What will you bring me?
நீ எனக்கு என்ன கொண்டுவருவாய்?

(ஊ) What are you going to bring me?
நீ எனக்கு என்ன கொண்டுவரப் போகின்றாய்?



(எ) What will you make?
நீ என்ன தயாரிப்பாய்?

(ஏ) What are you going to make?
நீ என்ன தயாரிக்கப் போகின்றாய்?

(ஐ) What will you show me?
நீ எனக்கு என்ன காட்டுவாய்?

(ஒ) What are you going to show me?
நீ எனக்கு என்ன காட்டப் போகின்றாய்?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அவுஸ்திரேலியாவின் பிரதமராக பெண் ஒருவர் தெரிவு

அவுஸ்திரேலியாவில் முதல் தடவையாக பெண் பிரதமர் ஒருவர் தெரிவு செய்யப் பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஜூலியா கிலாட் என்பவரே, இவ்வாறு தெரிவு செய்யப்பட்டிருப்பவராவார்.

முன்னர் பிரதமராகப் பதவி வகித்த கெவின் ரூட்டிற்கு எதிராக ஜூலியா கிலாட் போட்டி யிட்டதை யடுத்து, அவருக்கு எந்தவொரு எதிர்ப்பும் எழாததால் ஏகமனதாக அவர் பிரதமராக வும் கட்சியின் தலைவியா கவும் தெரிவு செய்யப்பட்டார்.



ஜூலியா பிரதமராகப் பதவியேற்கிறார்.



பதவி இழந்த கெவின் ரூட் ஊடக சந்திப்பில்....

கெவின்ரூட் கட்சி உறுப்பினர்களால் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்தே, ஜூலியா கிலாட் ஏகமனதாகப் பிரதமர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவுஸ்திரேலியாவின் தொழிற்கட்சிக்குள் நடத்தப்பட்ட வாக்கெடுப்பொன்றின்போது பிரதமர்

**ஜூலியா கிலாட்**

அவுஸ்திரேலி யாவின் முதலாவது பெண் பிரதமர்



- பிறந்தது - வேல்ஸ்
- சட்டத்தரணி, நாடாளுமன்றத்திற்கு முதலாவது தெரிவானது 1998 இல்
- 2006 ஆம் வருடத்தில் அவுஸ்திரேலியா தொழிற்கட்சியின் பிரதித் தலைவராக பதவி வகித்தார்.
- பிரதமராக இருந்த கெவின் ரூட்டின் அரசாங்கத்தில் இவர் வகித்த பதவிகள்
  - துணை பிரதமர்
  - கல்வித்துறை அமைச்சர்
  - தொழிற்துறை அமைச்சர்
  - சமூக நல சேவைகள் அமைச்சர்

AFP

அவுஸ்திரேலியாவின் இந்த வருட இறுதி யில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளமை யால், அதையொட்டி நடத்தப்பட்ட கருத் துக் கணிப்புக்களின்படி, ஆளும் தொழிற் கட்சி பின்தங்கிய நிலையில் இருப்பது தெரிய வந்துள்ளது அத்துடன், பிரதமர் கெவின் ரூட்டின் சில தீர்மானங்களையிட்டு மக்கள் அதிருப்தியில் இருப்பது தெரிய வந்ததையடுத்து, தலைமைப் பதவியை மாற்றுவதற்கு அக்கட்சியினர் தீர்மானித்த தாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

பிரதமராகத் தெரிவாகியுள்ள ஜூலியா கிலாட்டுக்கு வயது 48. அவர் ஒரு சட்டத்தரணி என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# குதிரையிலிருந்து கீழே விழுந்த இளவரசர் ஹெரி



அமெரிக்காவில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த இளவரசர் ஹெரி நலன்புரி சேவைக்காக நிதி சேகரிக்கும் பொருட்டு நடத்தப்பட்ட சிநேகபூர்வ போலோ போட்டியொன்றில் கலந்து கொண்டபோது, குதிரையில் சவாரி செய்த இளவரசர் எதிர்பாராத விதமாக கீழே விழுந்துவிட்டார். எனினும், அவருக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.

இளவரசர் குதிரையிலிருந்து விழும் காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்.

**அற்லஸ் கேள்வி - 263**

**கேள்வி:** அவுஸ்திரேலிய பிரதமரின் பெயர் என்ன?

**சரியான விடை...............................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 263,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

போட்டி இல - 261 இன்
சரியான விடை: ஷெய்ன் எலியட் ஸ்மித்

**பரிசு பெறுவோர்**

ஃபஷியா மன்சில்,
67/1, பிட்டவகுர, வெயங்கல்ல,
அகலவத்தை.

சி.நிஸா,
115/A3, செய்லான் வீதி, கல்முனை-02.

பவித்திரா குமரகுருபரன்,
75/01, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.




**01. 1997 இல் ஜப்பானில் கியோற்டோ நகரில் 150 நாடுகள் கலந்துகொண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் 'கியோற்டோ ஒப்பந்தம்' எனப்படுகின்றது. புவிக்கோளம் வெப்பமடைவதால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றி ரியோடி ஜெனைரோ, பெரிஸ், இந்தோனேஷியா, பாலித்தீவு உட்பட பல இடங்களில் நடத்தப்பட்ட மாநாடுகளிலும் புவி வெப்பமடைவது சம்பந்தமான பிரச்சினைகள் ஆராயப்பட்டன. கியோற்டோ மாநாட்டில் ஏற்படுத்தப்பட்ட தீர்மானங்கள் அல்லது ஒப்பந்தங்கள் எந்த ஆண்டுடன் காலாவதியாகின்றது.**



i. 2190 ii. 2011 iii. 2019 iv. 2012 v. 2020

**02. உலக உதைபந்தாட்டக் கிண்ணத்தை கூடிய முறை கைப்பற்றியுள்ள நாடு;**



i. தென் ஆபிரிக்கா ii. ஆர்ஜன்டீனா
iii. பிரேசில் iv. இத்தாலி
v. ஜேர்மனி

**03. பின்வரும் விடயங்களில் 2010 இல் எவற்றுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது?**



i. வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டம்
ii. கிழக்கின் உதயம் அபிவிருத்தித் திட்டம்
iii. சுனாமி புனரமைப்பு வேலைகள்
iv. எதிர்க்கட்சித் தலைவர்களை அடக்கி ஒடுக்கும் நடவடிக்கைகள்.
v. நுகர் பொருட்களின் விலைகளை உயர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**04. 2011 இல் இந்நாட்டில் தொடர்ச்சியாகப் பதவியிலிருந்த அரசியல் கட்சியை தோற்கடித்து சாதாரண மக்கள் புரட்சியை ஏற்படுத்திய 63 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்படவுள்ளது. இது தொடர்பாக பின்வரும் எவ்விடயம் உண்மைக்குப் புறம்பானது.**

i. 1956 இல் நடைபெற்ற தேர்தலில் S.W.R.D பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றது.
ii. அப்பொழுது டட்லி சேனாநாயக்க பிரதமராக இருந்தார்.
iii. சேர் ஜோன் கொத்தலாவல பிரதமராக இருந்தார்.
iv. அப்போது இலங்கை குடியரசாக இருக்கவில்லை.
v. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொடர் வளர்ச்சியின் காரணமாகத் தெரிவானவர் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள்.

**05. 2010 மத்தியில் பின்வருவனவற்றில் எது உலக அமைதியை குலைப்பதில் குறைந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும்?**

i. ஈரான் அணு ஆயுத உற்பத்தி விவகாரம்.
ii. வடகொரியா, தென் கொரியாவின் கடற்படைக் கப்பலைத் தாக்கியமை.
iii. இஸ்ரேல், பலஸ்தீன உதவிக் கப்பலைத் தாக்கியமை.
iv. ஆப்கானிஸ்தான் விவகாரம்.
v. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான பிரச்சினைகள்.

**06. இலங்கையில் சக்தி (மின்வலு) பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அரசு எடுத்து வரும் நடவடிக்கை அல்லாதது எது?**



i. நுரைச்சோலையில் நிலக்கரியால் இயங்கும் மின் உற்பத்தி நிலையத்தை அமைத்தல்.
ii. மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையம்.
iii. மகாவலி திட்டத்தில் கொத்மலை, உக்குவளை, விக்டோரியா, போவதன்னா, ரந்தனிகல ஆகிய இடங்களில் மின் உற்பத்தி நிலையங்களை நிர்மாணித்திருத்தல்.
iv. அம்பாந்தோட்டையில் காற்றாடியினால் மின் உற்பத்தி செய்தல்.
v. அணுக்கரு வலுவிலான மின் உற்பத்தி செய்தல்.

**07. இன்று உலகில் நான்கு பெரும் பொருளாதார வளம் கொண்ட நாடுகள் அடங்கியுள்ள வரிசை எது?**



i. ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், இந்தியா.
ii. சீனா, பிரேசில், இந்தியா, ஐக்கிய இராச்சியம்.
iii. சீனா, ஜப்பான், இந்தியா, ரஷ்யா.
iv. ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, பிரான்ஸ், சீனா.
v. ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ், ரஷ்யா.

**08. அண்மைக் காலத்தில் ஹரிபோட்டர் நாவல்களும் திரைப்படங்களும் உலகப் புகழ் பெற்றவையாக அமைந்தன. இந்தக் கற்பனை மாயாஜாலக் கதையை எழுதியவர்;**



i. J.K ரோலிங்
ii. அண்டன் செகோ
iii. மார்ட்டின் விக்ரமசிங்க
iv. வில்லியம் ஷேக்ஸ்பியர்
v. மு.வ.வரதராசன்

**09. இலங்கை தேசிய அதிகார சபையின் புகையிலை, மதுபானச்சட்டத்தின்கீழ் ஒரு குற்றமாக கணிக்கப்படாதது எது?**



i. பொது இடங்களில் புகைத்தல்.
ii. 21 வயதிற்கு குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்தல்.
iii. புகையிலை, மதுபானப் பொருட்களின் விளம்பரம்.
iv. 21 வயதிற்கு குறைந்தவர்களால் சிகரெட் விற்பனை செய்யப்படுதல்.
v. புகையிலை கம்பெனிகள் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு அனுசரணை வழங்குதல்.

**10. ஒருவரை இனங்கண்டு நிரூபிப்பதற்குரிய மிக நம்பகமான விஞ்ஞானப் பரிசோதனை முறை எது?**



i. கைவிரல் அடையாளம்
ii. D.N.A
iii. X கதிர் வீச்சுச் சோதனை
iv. குருதிச் சோதனை
v. கழியொலி அலகிடலிச் சோதனை (Ultra Sound Test)

**வினாத்தாள் 2 இன் விடைகள்**

***(30.06.2010 இல் பிரசுரமானது)***

| | |
|---|---|
| 1 - iii | 5 - iv |
| 2 - iii | 6 - v |
| 3 - ii | 7 - iii |
| 4 - i | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘லாரா’ மீண்டும்...?



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற மேற்கிந்திய தீவுகளின் சிறப்பு வீரர் பிரயன் லாரா மீண்டும் கிரிக்கெட் களத்திற்கு வரவுள்ளார் என்றவோர் செய்தி வெளிவந்துள்ளது.

இணையத்தளமொன்றில் வெளியாகியுள்ள இந்த செய்தியின்படி இங்கிலாந்தின் ‘சரே’ பிராந்திய அணியின் சார்பாக விளையாடுவதற்காகவே லாரா மீண்டும் கிரிக்கெட் களம் புகவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ண போட்டிகளுடன் சர்வதேச கிரிக்கெட் களத்திலிருந்து ஓய்வு பெற்ற லாரா பல சாதனைகளுக்கு உரித்துடையவராக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே, தற்போது இங்கிலாந்தின் ‘சரே’ பிராந்திய அணியில் ‘லாரா’ போட்டியிடவுள்ளமையினால் களத்தில் ‘லாரா’ போட்டியிடுவதைக் காணக்கூடிய வாய்ப்பு ரசிகர்களுக்கு கிட்டியுள்ளது எனலாம்.

## ஸ்போர்ட்ஸ் துணுக்குகள்..!

* டென்னிஸ் மட்டைகள் ஆரம்பத்தில் மரக்கட்டைகளைக் கொண்டே தயாரிக்கப்பட்டனவாம்.
* கால்பந்து விளையாட்டில் பயன்படுத்தும் பந்தில் 642 தையல்கள் உள்ளன.
* ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் அதிகமுறை செம்பியனாக தெரிவுசெய்யப்பட்ட அணிகள்-இந்தியா, இலங்கை அணிகளாகும் (தலா 4 முறை). பாகிஸ்தான் ஒரே ஒரு முறையே கிண்ணத்தை வென்றிருக்கிறது.
* முதலாவது நவீன ஒலிம்பிக் விளையாட்டில் அதிக பதக்கங்களை வென்ற நாடு-கிரீஸ். (43 பதக்கங்கள்). ஆண்டு-1896.
* உலக ஜம்னாஸ்டிக் செம்பியன்ஷிப் போட்டியில் வெற்றி பெற்ற முதல் அமெரிக்க வீராங்கனை-மார்சியா ஃப்ரடெரிக். ஆண்டு-1978.

# பங்களாதேஷ் அணியின் நம்பிக்கை நட்சத்திரம்

## தமிம் இக்பால்



அண்மைக்காலமாக பங்களாதேஷ் கிரிக்கெட் அணியில் சிறப்பாகத் தனது திறமையை வெளிக்காட்டி வருகின்ற ஒரு வீரர்தான் தமிம் இக்பால்.

இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரின்போது இங்கிலாந்து பந்து வீச்சாளர்களுக்கு துடுப்பாட்டத்தில் பெரும் நெருக்கடியைக் கொடுத்து வந்த இவர், அந்தப் போட்டித்தொடரில் பங்களாதேஷ் சார்பாக அதிக ஓட்டங்களைப் பெற்றவர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் பிரகாசித்து வருகின்ற தமிம் சிறந்த சராசரியையும் பெற்றுள்ளார்.

தற்போது 21 வயதாகின்ற தமிம் பங்களாதேஷ் சார்பாக 19 டெஸ்ட் போட்டிகளிலும் 76 ஒருநாள் போட்டிகளிலும் போட்டியிட்டிருப்பதுடன், டெஸ்ட்டில் 1445 ஓட்டங்களையும் ஒருநாள் போட்டிகளில் 2228 ஓட்டங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருட இறுதியில் சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 154 ஓட்டங்களை இவர் பெற்றமையே இவரது அதிகூடிய ஓட்டங்களாக உள்ளது.

இத்தனை சிறப்புமிக்க தமிம் கிரிக்கெட் பின்னணியைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷுக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைக்கப்பெற்ற ஆரம்ப காலங்களில் அந்த அணிக்கு தலைமை வகித்த அக்ரம் கான் இவரது மாமனார் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும், பங்களாதேஷ் அணியிலுள்ள நஃபில் இக்பால், தமிமின் சகோதரர் ஆவார்.

இத்தகைய சிறப்புக்களையும் பின்னணியையும் கொண்டுள்ள தமிம் இக்பால் இன்றைய பங்களாதேஷ் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்றமை சிறப்புக்குரியது.

## கால்பந்து விதிமுறைகள்



உலகம் பூராவும் புகழைப் பெற்றுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளை மேற்பார்வை செய்யவும் விதிமுறைகளை வகுப்பதற்கும் என்று 1860 இல் தான் கால்பந்துக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதற்கமைய, விதிமுறைகளை இங்கிலாந்து வகுத்தது. இரண்டு அணிகளிலும் தலா பதினொரு வீரர்கள் இடம்பெறல் வேண்டும் என்பதும், கால்களாலும் தலையாலும் மட்டுமே பந்தினைத் தொடமுடியும் என்பதும், பந்துத் தடுப்பாளர் மட்டுமே பந்தினைக் கைகளால் தடுக்கமுடியும் என்பதும் விதிமுறைகளாக வகுக்கப்பட்டன.

# சப்பாத்து அணியாததால் வாய்ப்பை இழந்த இந்திய அணி



1950 ஆம் ஆண்டில் நடைபெற்ற உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியின்போது தகுதிகாண் சுற்றுப்போட்டியில் பங்குகொள்ள இருந்த சில அணிகள் அப்போது நிலவிய அரசியல் காரணங்களினால் போட்டியிலிருந்து விலகின. எனவே, இந்த வெற்றிடத்தை நிரப்பும் வகையில் அதிர்ஷ்டவசமாக இந்திய அணிக்கு பிரதான சுற்றில் போட்டியிட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. ஆயினும், வீரர்களுக்கான ‘சப்பாத்து’ வடிவில் இந்திய அணிக்கு விதி குறுக்கிட்டது. எவ்வாறென்றால், இந்திய கால்பந்தாட்ட வீரர்கள் அக்காலங்களில் சப்பாத்துக்களை அணிந்துகொண்டு போட்டியிடுவதில் தேர்ச்சியோ, அனுபவமோ பெற்றிருக்கவில்லை. எனவே, குறித்த போட்டிகளில் வெறும் காலுடன் போட்டியிடுவதற்கு அனுமதி கேட்டனர். ஆனால், சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் விதிப்படி சப்பாத்துக்கள் இன்றி போட்டியிடுவது தடைசெய்யப்பட்டுள்ளமையால் இந்திய அணியின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

எனவே, மாற்றுவழி இல்லாத நிலையில் இந்திய அணி குறித்த போட்டிகளிலிருந்து பரிதாபகரமாக ஒதுங்கிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் இதுவரை கால்பந்தாட்டத்தில் இந்திய அணிக்கு சிறந்த இடத்தை அடைவதற்கு வாய்ப்புக் கிட்டவே இல்லை.

# விவாத மேடை

## ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கலாமா?



தவறு செய்யும் மாணவர்களைத் திருத்தவும் அவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கருதியும் தண்டனை வழங்க வேண்டும். ஆனாலும் மாணவர்களை நியாயமின்றித் தண்டிப்பது சிறந்த தன்று. அநியாயமாகத் தண்டிக்கப்படும் மாணவர்கள் தமது படிப்பையும் லட்சியத்தையும் வெறுக்கின்றனர். அதுமட்டுமன்றி, உளரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். இதனை அனைத்து ஆசிரியர்களும் உணர வேண்டும். *-விஜய் வாசகன், கண்டி.*

ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கவே கூடாது. ஏனென்றால், ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பதால் மாணவர்கள் அதனையே நினைத்து நினைத்து கற்கமுடியாத நிலைக்கு ஆக்கப்படுகின்றனர். எனவே, ஆசிரியர்கள் மாணவர்களை அன்பாலேயே அடக்க வேண்டும். *-எஸ்.எச்.எம்.மிஸ்ஃபார், குருணாகலை.*

மாணவனை ஓர் ஆசிரியர் தண்டிப்பது குற்றம். அவர்களை நல்வழிப்படுத்த இனிமையாக, பண்பாகச் சொல்லித் திருத்தினால் தான் அவர்கள் நல்லவழியில் செல்வார்கள். தண்டிப்பதால் மாணவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆதலால் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கக் கூடாது. *ப.பிரணவன், சுழிபுரம்.*

எந்தவொரு ஆசிரியரும் மாணவருடன் நண்பனாகப் பழகினால் அவர்களைத் தண்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. அதுமட்டுமல்லாது அன்பாக விடயங்களை எடுத்துரைத்தால் அவர்கள் அதனை நன்கு புரிந்து கொள்வார்கள். எனவே, எந்தவொரு ஆசிரியரும் மாணவர்களை தண்டிக்கத் தேவை இல்லை. *-ஆர்.பர்வின், சம்மாந்துறை.*

மாணவர்கள் செய்த தவறுகளை திருத்திக் கொள்ளத்தான் ஆசிரியர்கள் அவர்களைத் தண்டிக்கிறார்கள். ஆசிரியர்களின் நோக்கம் மாணவர்களைத் தண்டிக்கவேண்டும் என்பதல்ல. அவர்கள் எதிர்காலத்தில் நாட்டிற்கும் வீட்டிற்கும் நற்பிரஜையாக மாறவேண்டும் என்பதே ஆசிரியர்களின் எதிர்பார்ப்பாகும். *-அப்னாஸ் அன்வர்தீன், திக்குவல்லை.*

இன்றைய மாணவ சமூகம் கல்வியில் வீழ்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அதிகமான மாணவர்கள் அரட்டை அடிப்பதிலும் நேரத்தை வீணடிப்பதிலும் ஈடுபட்டு தம் காலத்தைக் கழிக்கின்றனர். இவர்களைத் தண்டிப்பதன் மூலம் மாற்றத்தைக் கொண்டுவரலாம். ஆகவே, ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பது தான் சரியானது. *-ஜே.சௌமியா, மாவனல்லை.*

ஒருசில ஆசிரியர்கள் மாணவர்களுடன் கடுமையாக நடந்துகொள்கின்றனர். மாணவர்கள் செய்யும் சிறுசிறு தவறுகளுக்குப் பாரிய தண்டனைகளை வழங்குகின்றனர். இது ஒரு வகையில் சிறுவர் துஷ்பிரயோகமேயாகும். இவ்வாறான நிலைமைகளில் மாணவர்கள் ஆசிரியர்களுக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இது விபரீதமான பின்விளைவுகளுக்கே வழிவகுக்கும். *-அம்மா நிஃமத்துல்லா, மருதமுனை.*

ஆசிரியர் மாணவரைத் தண்டித்தால் மாணவர்களுக்கு ஆசிரியர் மீது வரும் வெறுப்பு அப்பாடத்திலும் வரும். இதனால், அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படும். ஆசிரியர் மாணவர்களைத் தண்டிக்காமல் அன்புடன் எடுத்துக் கூறினால் மாணவர்கள் ஆர்வத்துடன் கற்பர். *-ரூபினி கருணாகரன், பருத்தித்துறை.*

மாணவர்களைத் தண்டிக்க முயன்றால் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் மீது கோபம் இருக்குமே தவிர, மரியாதை இருக்காது. இதனால், மாணவர்கள் ஆசிரியர்களை எதிரி போல் பார்ப்பர். ஆகவே, ஆசிரியருக்கு கற்பிக்க விருப்பம் இல்லாமல் போவதுடன், மாணவர்களுக்கும் கல்வி மீது வெறுப்புத்தான் ஏற்படும். அதனால், அவர்களது வாழ்வும் திசைமாறிப் போய்விடும். நல்ல பிரஜைகளை உருவாக்க வேண்டிய ஆசிரியர்களே. பிரச்சினைக்குரிய பிரஜையை உருவாக்க முயற்சிக்கக்கூடாது. *-ஜுனைட் எம்.பஹத், காத்தான்குடி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய நடுக்கத்தால் பூமியில் பாதிப்பு

கடந்த 11 ஆண்டுகளாக அமைதியாக இருந்த சூரியன் தற்போது விழிப்படைந்துள்ளதாக அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன், அது பூமியை நோக்கி ஒரு பெரும் சூறாவளியை அனுப்பும் அபாயமும் உள்ளதாக அவர்கள் மேலும் எச்சரித்துள்ளனர்.

வொஷிங்டனில் கடந்த ஜூன் 8 ஆம் திகதி விண்வெளி காலநிலை பற்றிய அமர்வு இடம்பெற்றது. அந்நிகழ்வில், அரச அதிகாரிகள், திட்டமிடல் அதிகாரிகள், ஆய்வாளர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்த அமர்வின்போதே மேற்படி அபாயம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், 21 ஆம் நூற்றாண்டில் தொழில்நுட்ப உபகரணங்களை சூரியனிடம் இருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.



இதன்போது, நாஸாவின் ஈலியோ இயற்பியல் துறைத் தலைவர் ரிச்சர்ட் ஃபிஷர் கருத்துத் தெரிவிக்கையில், ''நமது சூரியன் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்து தற்போது விழித்திருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் அதன் உக்கிரமான தாக்கத்தை நாம் உணரமுடியும்'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சூரிய நடுக்கத்தால் வெளிக்கிளம்பும் தீச்சுடர்களின் செறிவு மாறுபடக்கூடியவை. அது பூமியின் காந்தப்புலத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், இவை பெரும் கதிரியக்கத் தன்மையுடையவை. மனித இனம் இக்கதிரியக்கத்தில் இருந்து இயற்கையாகவே பாதுகாக்கப்பட்டிருந்தாலும் தொழில்நுட்பம் இதனால் பெரும் பாதிப்படையலாம் எனவும் கருதப்படுகின்றது. சூரிய தீச்சுடரில் இருந்து வெளிக்கிளம்பும் வெப்பம் செய்மதிகளைச் செயலிழக்கச் செய்வதுடன், ஓடுகதிர் அலைகள் வானொலித் தொடர்புகளையும் பாதிக்கக்கூடிய சாத்தியம் உள்ளது.

மேலும், இதன்போதான 'பெரும் ஒளிவட்ட வெளித்தள்ளுதல்' (Coronal mass ejections, CMEs) மனித இனத்தைப் பாதிக்கும் எனவும், இது 2012 ஆம் ஆண்டில் நிகழலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஒளிவட்ட வெளித்தள்ளுதலின்போது, சூரியனின் ஒளிவட்டத்தில் இருந்து அல்லது அதன்வெளி வளிமண்டலத்தில் இருந்து வாயுக்கள் வெளியேற்றப்படுகின்றன. பெருமளவு கதிரியக்கப் பொருட்களைக் கொண்டிருக்கும் இவ்வாயுக்கள், பூமியை மூன்று முதல் ஐந்து நாட்களுக்குள் அடையக்கூடும்.

இதனால், அதிதொழில்நுட்பத்தைக் கொண்டுள்ள வளர்ச்சியடைந்த நாடுகளின் நகரங்களில் மின்சாரத் தடை ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது 'கத்ரீனா' சூறாவளியினால் ஏற்பட்ட பொருளாதாரப் பாதிப்பைவிட 20 மடங்கு அதிகமாக இருக்கும் எனவும் அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.









# 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பே செவ்வாயில் நீர்

ஹலோ ரொபோ பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் ஆய்வின்படி, 350 கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செவ்வாய்க்கிரகத்தில் நீர் இருந்திருக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. அதற்கமைய, தற்போதும் பல்வேறு ஆய்வுகளைச் செய்து வருகின்றனர். இந்த நிலையில், ஹலோ ரொபோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அமெரிக்காவின் நாஸா விண்வெளி மையம் வெளியிட்ட செவ்வாய்க்கிரகத்தின் படங்களை வைத்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். தவிர, ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்க செயற்கைக்கோள் வெளியிட்ட தகவல்களையும் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்திக் கொண்டனர்.

இத்தரவுகளின் அடிப்படையில் செவ்வாய்க்கிரகத்தில் 54 ஆறுகளின் கழிமுகங்கள் உள்ளன எனவும் இதனால், அங்கு ஆறுகள் உற்பத்தியாகி ஓடிக்கொண்டிருக்க வாய்ப்புள்ளது என்றும் அந்த ஆய்வு முடிவினூடாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



செவ்வாயின் வடதுருவத்தில், அட்லாண்டிக் கடல் அளவு நீர் இருக்கிறது. இது பூமியில் உள்ள நீரின் அளவுக்கு சமமானதாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.


செவ்வாயில் நீர் உள்ளதா? இல்லையா? என்ற சர்ச்சை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இதுகுறித்து விஞ்ஞானிகள்

# கிரகங்களின் ஈர்ப்புவிசை

பூமியின் ஈர்ப்புவிசையைக் காட்டிலும் சந்திரனின் ஈர்ப்புவிசை ஆறு மடங்கு குறைவு. பூமியில் ஈர்ப்புவிசை இருப்பதால்தான் அந்த விசை வளிமண்டலத்தை இழுத்துப் பிடித்திருக்கிறது. அத்தகைய விசை சந்திரனுக்கு இல்லாததாலேயே அங்கு காற்று இல்லை.

சந்திரனோடு ஒப்பிடும்போது செவ்வாயின் ஈர்ப்புவிசை ஓரளவு கூடுதலாக உள்ளது. பூமியின் ஈர்ப்புவிசையின் பாதியளவு செவ்வாயில் காணப்படுவதால், அங்கே கொஞ்சம் காற்றுள்ளது. எனவேதான், அங்கு உயிர்கள் வாழ்வதற்கான சாத்தியம் நிலவுவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். தவிர, வியாழக் கிரகத்தின் ஈர்ப்புவிசையானது பூமியை விடவும் 350 மடங்கு அதிகம். இந்த ஈர்ப்புவிசைக்கு உட்பட்டு விண்கற்கள் நாள்தோறும் வியாழனில் விழுகின்றன. அத்துடன், வால் நட்சத்திரங்கள்கூட அடிக்கடி வியாழனுடன் மோதுவதும் இந்த ஈர்ப்புவிசையால்தான். இதனால்தான் அங்கு உயிர்கள் வாழ முடியாத சூழ்நிலை நிலவுகின்றது.

# சம இரவு நாள்




சம இரவு நாள் (Equinox) என்பது சூரியன் நிலநடுக்கோட்டினைக் கடந்து செல்லும் நாளாகும். ஆண்டுக்கு இருமுறை சூரியன் இவ்வாறு நிலநடுக்கோட்டினை கடக்கும் நிகழ்வு ஏற்படும். சம இரவு நாள் இவற்றில் எந்தவொரு நாளையும் குறிக்கும். இந்நாட்களில் இரவும் பகலும் ஒரே அளவாக (ஏறத்தாழ 12 மணி நேரம்) இருக்கும். சம இரவு நாட்கள் சாதாரணமாக மார்ச் 20 ஆம் தினத்திலும் செப்டெம்பர் 22 ஆம் தினத்திலும் நிகழும்.

இத்தினங்கள் புவியின் வடபகுதியில் இளவேனில் மற்றும் இளங்கூதிர் காலங்கள் ஆரம்பமாகும் நாட்களாக அறியப்படுகின்றன. மக்கள் இந்நாட்களை எளிதாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருப்பதால், இந்நாட்களில் பண்பாட்டு ரீதியிலான சில விழாக்கள் பல்வேறு நாடுகளில் கொண்டாடப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் வாசகர் மடல்



**நா**ளுக்கு நாள் உன்னில் ஆக்கங்கள் அதிகமாகி வருவதையும் பெரும்பாலும் நிகழ்கால தேவைகளுக்கேற்ப அவை பிரசுரமாவதும் வரவேற்கத்தக்கது.

**-பிர்தௌஸியா ஹாஸிம், உயர் தரம், ஜாமியுல்அஸ்ஹர் ம.கல்., உடதலவின்னை.**

**உ**ண்மையில் எத்தனை ஊடகங்கள் இருந்தாலும் நல்ல அறிவுள்ள சமூகத்தை உருவாக்குவதில் 'விஜய்'யின் சேவையைப் பாராட்டுகிறேன். 'போஷாக்கு எங்கே?', 'காய்ச்சல்', 'யானைகள்', 'ராஜ பரம்பரையின் அரண்மனை' போன்ற ஆக்கங்கள் சுவாரஸ்யமானவை. அத்துடன், 'விஜய்'யில் ஊடகம் பற்றிய ஆக்கங்களைப் பிரசுரித்தால் எம்மைப் போன்ற இளம் ஊடகவியலாளர்களுக்கு சிறந்த பயனுடையதாக இருக்கும்.

**-ஜூனைட் எம்.பஹத், ஸ்பீட் நிவ்ஸ்பேப்பர், புதிய காத்தான்குடி.**

***★ ஊடகம் தொடர்பிலான தகவல்கள் 'விஜய்'யில் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளன, தேவைக்கேற்ப அவை பிரசுரமாகும். தவிர, சிறந்த ஊடகவியலாளர்களை உருவாக்குவதற்கு நாம் பல்வேறு வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதோடு, களமும் வழங்கி வருகின்றோம். (ஆ-ர்)***



**'வி**ளையாட்டுப் பகுதி'யில் பிரசுரமான உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தகவல்கள் எம்மைப் போன்ற விளையாட்டு ரசிகர்களுக்கு பெரும் பயனுடையதாக இருந்தன. எனினும், 'உலகக் கிண்ண விசேட துளிகள்' என்ற பகுதியில் சொந்த மண்ணில் உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி நடத்தி வெற்றி பெற்றுள்ள நாடுகளின் வரிசையில் இங்கிலாந்து (1966) என்பதே சரியான தகவலாகும்.

**-செ.செந்தூரன், பிரம்படி வீதி, கொக்குவில்.**

***★ அச்சுப்பிழைக்கு வருந்துகிறோம். தவறை சுட்டிக் காட்டியமைக்கு நன்றி. (ஆ-ர்)***

**'யா**னைகள்' தொடர்பான கட்டுரை சிறப்பாக இருந்தது. 'அஸ்தினாபுரம்' என்ற சொல் 'யானையூர்' என்று பொருள்படும் என்பதை இதனூடாக அறிந்துகொண்டேன். தவிர, அனைத்து விடயங்களும் கண்ணையும் கருத்தையும் ஈர்த்தன.

**-கவிஞர் மு.துரைசாமி, சதர்லேண்ட், எல்ல.**

**'பி**ள்ளைகளுக்கான போஷாக்கு மட்டம்', 'ராட்சதமுனை கொடூர நிகழ்வுகள்' பற்றிய கட்டுரைகள் சுவாரஸ்யமாகவும் பயனுள்ளதாகவும் இருந்தன. அத்துடன், க.பொ.த (உ/தர) பொது வினாத்தாள் மிகவும் பயனுள்ளது. 'விஜய்' மேலும் முன்னேற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**-எஃப்.ருஷ்தா, தரம் - $11^{A}$, ஸாஹிரா மு.வித்., அநுராதபுரம்.**

**'வ**ண்ணத்துப்பூச்சி', 'வெற்றி இலக்கை எவ்வாறு அடைவது?' பற்றிய தகவல்கள் அற்புதம்.

**-எஃப்.ஜஸ்ரா, பாத்திமா பா.ம.வித்., புத்தளம்.**

**ந**டுப்பக்கக் கட்டுரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. மேலும், 'ராட்சதமுனை என அழைக்கப்பட்ட ராசமுனகந்த' என்ற தலைப்பின் கீழ் வெளியான தகவல்கள் உள்ளத்தை உருக்கின.

**-முஹம்மத், அஹ்மத், தரம் - $7^{B}$, அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.**

**'ம**னிதனுக்கு நெருக்கமான யானைகள்' என்ற பகுதி என்னை மிகவும் கவர்ந்தது.

**-இ.ஐங்கரன், தரம் - $11^{B}$, டிறிபேக் கல்., சாவகச்சேரி.**

**இந்த இதழில் (07.07.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.07.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.

---

**5** வட்டத்திலுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி குறைந்தது 10 சொற்களையேனும் அமைக்க








தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.07.14 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 268
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## சரியான சொல்லில் கோடிடுக — 4


1. குலழ்/குழல்/குழள்
2. நிபந்தனை/நிபன்தனை/நிபந்துணை
3. பூஞ்ஞணம்/பூஞ்சணம்/பூஞ்சனம்

## குழம்பியுள்ள சொற்களை ஒழுங்கமைத்து எழுதுக — 3


| | |
|---|---|
| orcn ______ | yindw ______ |
| kare ______ | kippunm ______ |
| quislrer ______ | palep ______ |
| coran ______ | efal ______ |

## இணைக்க — 1

Bike
Tent
Kite
Fish
Bird
Moon




## எத்தனை உள்ளன? — 2



## அறிவுக்கு விருந்து 265 விடைகள்

**போட்டி: 02**



**போட்டி: 03**

Piano, Guitar, Harp, Cymbals, Drums, Tuba, Violin, Oboe

**போட்டி: 04**

1. மியன்மார்
2. பெல்ஜியம்
3. இங்கிலாந்து
4. இலங்கை

**போட்டி: 05**

1. CMXCIX -999 2. MCM - 1900
3. CMXC - 990

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 265 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
வாஹிட் குத்தூஸ், 26/2, பெரிய பள்ளிவாசல் வீதி, பதுளை.

**போட்டி: 02**
கு.திலக்ஷன், யோகாவனம், கோணாவளை லேன், கொக்குவில் கிழக்கு.

**போட்டி: 03**
ப.மதுரிஜா, 47, புகையிரத நிலைய வீதி, கொட்டகலை.

**போட்டி: 04**
லதீனா லாஹீர், வைத்தியர் வீதி, மாஞ்சோலைச்சேனை.

**போட்டி: 05**
கோ.கண்ணன், கணபதிப்புலம், கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- கே.விமலகிசாந்த, தெரணியகலை.
- ஹில்மா முர்ஷித், வெள்ளம்பிட்டிய.
- ப.பிரணவன், வட்டுக்கோட்டை.
- ஆர்.ருக்ஷானா, மடாடுகம.
- எஃப்.ஃபஸ்னா, சிலாபம்.
- எஸ்.யிமேஷி, கண்டி.
- ஐ.ரிஸ்மி, ஹட்டன்.
- எஃப்.இல்மா, வெலிகம.
- ஏ.பாஸித், பொல்கொல்ல.
- எம்.இஜாஸ், அக்குறனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருக்கு இளவரசர் பட்டம்?




எது எப்படி இருந்தபோதும் மன்னன் வயது முதிர்ந்தவனாக இருப்பதனால் அவனுக்கு ஆட்சிப்பொறுப்பில் உதவி தேவைப் பட்டது. அதற்காக மன்னன் பரராசசேகரன் தன் அரச சபையைக் கூட்டினான். வரும் காலம் அறிந்துகூறும் சோதிட வல்லவன் ஒருவனை சபைக்கு வரவழைத்து அவனிடம் மூத்த மகன் சிங்கவாகுவிற்கு இளவரசர் பட்டம் கட்ட நல்லநாள் பார்த்துக் கூறுமாறு வேண்டினான். அதற்கு சோதிடர் சிங்கவாகுவின் ஜாதகத்தைத் தரும்படி வேண்ட, சோதிடரிடம் சிங்கவாகுவின் ஜாதகக் குறிப்பு ஒப்படைக்கப் பட்டது. அந்த ஜாதகக் குறிப்பை நன்கு ஆய்வு செய்த சோதிடர் மன்னனைப் பார்த்து, ''மாசில்லாத ஆட்சி செய்யும் யாழ்ப்பாண மன்னா! முடிக்குரிய உன் மைந்தன் ஆட்சிக்குரியவனாக இருந்தாலும் அவனின் ஜாதகக் குறிப்பின்படி கெடுதிகள் பல நேரும் காலமாக இருக்கிறது. இவ்வாறு இருக்கும்போது அவனுக்கு முடிசூட நினைப்பது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். இதுவே என் முடிவாகும்'' என்றான்.

இதுகேட்ட மன்னன் இடியோசை கேட்ட நாகம் போல் சோர்ந்து போனான். சோதிடரை நோக்கி ''சோதிட வல்லுனரே! எத்தகைய துன்பங்கள் நேரிடினும் நான் மரபுவழிதவறமாட்டேன். மூத்தோன் இருக்க அடுத்தவர்களுக்கு முடிசூட்ட எண்ணமாட்டேன். துன்பங்கள் வராது தடுப்பதற்கு சோதிடத்தில் ஏதாவது வழி இருந்தால் கூறுங்கள்'' என்றான்.

அப்போது அங்கிருந்த முக்காலமும் அறிந்து கூறவல்ல மாமுனிவர் ஒருவர் எழுந்து மன்னனை நோக்கி பின்வருமாறு கூறலானார்; ''மன்னவா! யாகம் ஏதும் செய்து அரசு பெறுவானாயின் ஒருவேளை சித்தி ஏதும் பெறமுடியும். இருந்தாலும் இப்புவியில் விதியை யாரால் வெல்லமுடியும்? அதனால், எதையும் யோசித்து முடிவு செய்வதே மிகவும் நல்லது எனக் கூறினார்.



அப்பொழுது சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்ததுபோல் மன்னனின் இரண்டாவது மனைவியின் சகோதரனும் மந்திரிகளில் ஒருவனுமான அப்பா முதலி என்பவன் எழுந்து ''மாமன்னரே! மைந்தன் சிங்கவாகுவின் ஜாதகம் ஒத்துவரவில்லையானால் ஏனைய மைந்தர்களின் ஜாதகத்தை ஆய்வு செய்து அவர்களில் ஒருவனை இளவரசர் ஆக்குவது நாட்டுக்கு நல்லதல்லவா?'' என்றான். அவனின் உள்நோக்கத்தைப் புரிந்துகொண்ட மன்னன் ''அவையோரே! எந்த வகையான இடர் வந்தாலும் என் மூத்த மைந்தன் இளவரசனாக வருவதையே நான் விரும்புகிறேன். மாமுனிவரே யாகம் செய்வதற்கு ஏற்ற நன்நாளைக் கூறுங்கள்'' எனக் கூறியவாறே முதுமை காரணமாக ஏற்பட்ட பலவீனத்தால் மயக்க முற்றுத் தரையில் வீழ்ந்தான். வீழ்ந்த மன்னனை மந்திரிமாரும் சுற்றத்தாரும் நீர் தெளித்து அவனின் மயக்கத்தைப் போக்க முயன்றனர்.

மயக்கம் தீர்ந்த மன்னன் பரராசசேகரனை நோக்கி அவனுடைய சுற்றத்தாரும் மந்திரி, பிரதானிகளும் ''மயிலேறும் நல்லூர் முருகப் பெருமான் இருக்கும்போது நாம் எதற்கு அச்சம் கொள்ளவேண்டும். யாகத்தை மேற்கொண்டு சிங்கவாகுவை இளவரசராக முடிசூட்டுவோம்'' என்றனர். அவர்கள் கூறியவாறே சிங்கவாகுவிற்கு மன்னன் முடிசூட்டி இளவரசனாக்கினான். கூடவே அரசாளும் உபாயங்களையும் அவனுக்கு உபதேசித்தான். சிங்கவாகுவும் தந்தையோடு இணைந்து தன்னால் இயன்ற சேவைகளை மக்களுக்குச் செய்து வந்தான்.

**மயக்கம் தீர்ந்த மன்னன் பரராசசேகரனை நோக்கி அவனுடைய சுற்றத்தாரும் மந்திரி, பிரதானிகளும் "மயிலேறும் நல்லூர் முருகப் பெருமான் இருக்கும்போது நாம் எதற்கு அச்சம் கொள்ளவேண்டும். யாகத்தை மேற்கொண்டு சிங்கவாகுவை இளவரசராக முடிசூட்டுவோம்" என்றனர்**

இவ்வாறு நல்லாட்சி நடக்கும் காலகட்டத்தில் ஒருநாள் ஆதவன் மேற்குத் திசைநோக்கிப் பயணிக்கும் நேரம் யானையொன்று மதங்கொண்டு அரண்மனை வீதியில் தன்னிச்சையாக ஓடிவந்தது. கண்டோர் அஞ்சி நடுங்கி ஓடினர். அவ்வேளையில், அங்கே வீதியில் நின்ற இளவரசன் சிங்கவாகுவை அது தாக்குவதற்கு மிக நெருங்கி வந்தது.

(தொடரும்)



## பஞ்சபாண்டவர்கள் வசித்த ஐந்து குகைகள்

பஞ்சபாண்டவர்கள் வனவாசம் மேற்கொண்டபோது வசித்ததாகக் கூறப்படும் ஐந்து குகைகள் இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் உள்ள 'பன்ச்மாரி' என்னும் மலைத்தொடர் பகுதியில் உள்ளன. பஞ்சமாரி அல்லது பன்ச்மாரி என்று அழைக்கப்படும் இம்மலை 'சத்புரா மலைத்தொடரின் ராணி' என்றும் அழைக்கப்படுகிறது. இந்த பன்ச்மாரி மலைத்தொகுதி ஓர் அமைதிமிக்க பிரதேசமாகும். இந்தியாவில் உள்ள மலைகளில் இந்த பன்ச்மாரி மலைத்தொகுதி மகிழ்ச்சி நிலவும் மற்றும் சமய, வரலாற்று, இயற்கை தொடர்பான பல சிறப்புக்களைக் கொண்டதாகும். 'பஞ்சமாரி' என்ற பெயர், ஐந்து 'மதிகள்' அல்லது ஐந்து குகைகள் என்பதிலிருந்து வந்ததாகும்.

இங்கு உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நீர்வீழ்ச்சிகள், இயற்கைக் காட்சிகள், மலைத்தொகுதிகள், பச்சைப்பசேல் என்ற மலைக்குன்றுகள் என்பன அமைந்துள்ளன.

இந்த இடம் முதன்முதலாக பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் 1862 ஆம் ஆண்டு கெப்டன் ஜேம்ஸ் போர்சீத் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இடத்தின் அழகில் மனம் மயங்கிய அவர் இங்கு விடுதியொன்றை அமைத்தார். அவர் எழுதிய இந்தியாவின் மலைகள் பற்றிய புத்தகத்தில் 'பன்ச்மாரி' மலையின் அழகு பற்றி விரிவாக பல விடயங்களை எழுதியுள்ளார்.

பிரித்தானியர்கள் தமது பொழுதை மகிழ்ச்சிகரமாகக் கழிப்பதற்கும் இயற்கையை ரசிப்பதற்கும் இங்கு வருகை தருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தனர். பன்ச்மாரிக்கு வரும் உல்லாசப் பயணிகள் இதனை 'மத்திய பிரதேசத்தின் காஷ்மீர்' என்றும் அழைக்கின்றனர்.

## ஆதியில் நீரில் மூழ்கியவருக்காக இன்னும் தொடரும் சடங்கு

ஆதிகாலத்தில் நீரில் மூழ்கிய ஒரு கல்விமானுக்காக இன்னும் சடங்குகளை செய்து வருகிறார்கள் சீன மக்கள்.

இந்த சடங்கு துவான்வு பண்டிகை (Duanwu Festival) மற்றும் 'பறக்கும் நாக படகுப் பண்டிகை' (Dragon Boat Festival) என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு பாரம்பரிய பண்டிகையாக கொண்டாடப்பட்டு வருகிறது.


சொங்ஸி

இப்பண்டிகையின் முக்கிய அம்சங்களாக அரிசியால் தயாரிக்கப்பட்ட சொங்ஸி (Zongzi) என்னும் உணவை உண்ணல், அதனை பொட்டலமாகச் செய்து நதியில் போடுதல் மற்றும் பறக்கும் நாகப் படகுப் பந்தயம் (Dragon Boat Race) என்பன உள்ளன. இந்த 'துவான்வு' பண்டிகை சீன பஞ்சாங்கத்தின்படி வருடாந்தம் ஐந்தாம் மாதத்தில் ஐந்தாம் நாள் கொண்டாடப்படுகிறது.


கு யுவான்

சீனாவின் புகழ்பெற்ற கல்விமானாகிய கு யுவான் (Qu Yuan) என்பவரின் வாழ்க்கை மற்றும் இழப்பை நினைவு கூர்ந்தே இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. கு யுவான் கி.மு 278 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவை ஆட்சி செய்த ச்சு (Chu) மன்னரின் அமைச்சரவையில் இருந்த நீதியும் நேர்மையும் மிக்க அமைச்சராவார்.

நாட்டையும் அரசையும் உளப்பூர்வமாக நேசித்த அவர்மீது ஏனைய அமைச்சர்கள் சிலர் பழிச்சொல் கூறி அவரை வெளியேற்றினர். அமைச்சரவையை விட்டு வெளியேறிய கு யுவான் தனது அஞ்ஞாதவாசத்தின்போது மக்கள் மீதும் நாட்டின் மீதும் அவர் வைத்திருந்த அன்பை வெளிப்படுத்தி ஏராளமான கவிதைகளை எழுதினார். அவர் தனது 37 ஆவது வயதில் ஒரு பாரமிக்க கல்லை தனது மார்போடு அணைத்தபடி 'மைலோ' நதியில் (Milo River) பாய்ந்து மூழ்கிப் போனார்.

கு யுவான் ஒரு நேர்மை மிக்க மனிதர் என்பதை அறிந்து கொண்ட மக்கள் அவரைக் காப்பாற்றுவதற்காக நதியில் திரண்டனர். படகில் நதி முழுவதும் தேடியும் அவர்களின் முயற்சி பலனளிக்கவில்லை.

அவரை நதியிலிருந்து மீட்பதற்கு மேற்கொண்ட முயற்சியை நினைவுகூர்ந்தே பாரம்பரியமாக அந்த நதியில் வருடாந்தம் பறக்கும் நாகப்படகுப் பந்தயம் நடத்தப்படுகிறது. இதன் காரணமாகவே இப்பண்டிகை 'பறக்கும் நாகப்படகு பண்டிகை' என்றும் அழைக்கப்படுகிறது.

கு யுவான் இனி எப்போதும் திரும்பி வரமாட்டார் என்பதால் மக்கள் ஆற்றில் அவருக்கு படைப்பதற்காக பிரார்த்தனை செய்யப்பட்ட சொங்ஸி என்னும் உணவுப் பொட்டலத்தைப் போடுகின்றனர். இந்த சொங்ஸி என்னும் உணவு மூங்கில் இலையால் பொதி செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொலைத்தொடர்புத்துறையில் வளர்ச்சி காணல் என்றால் என்ன?





எந்தவொரு நாடும் தகவல் தொலைத்தொடர்பு சாதனத்துறையில் வளர்ச்சி காண வேண்டியது அவசியம் என்ற கருத்து இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படுகின்ற ஒரு முக்கிய தலைப்பாக அமைந்துள்ளது.

தகவல் தொலைத்தொடர்புத் துறையில் வளர்ச்சி காணல் என்பது எதனை? அதன் அர்த்தம் என்ன என்பது அநேகருக்குத் தெரிந்திருப்பதில்லை. இதற்கு சரியான விளக்கத்தை அளிக்கும் வகையிலேயே அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்பட்ட அறிவுசார் சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான ('WSIS\ - World Summit on the Socity) மாநாட்டின்போது சில அறிவுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதன்படி, உலகிலுள்ள எந்தவொரு சமூகமும் தகவல் தொலைத்தொடர்பு சாதனத்துறையில் முழுமை அடைவதென்றால் அந்த நாடோ, சமூகமோ 4 அம்சங்களில் முழுமை பெற்றிருக்கவேண்டும் என்பதே அந்த அறிவுறுத்தலாகும். அந்த நான்கு அறிவுறுத்தல்களும் பின்வருமாறு அமைந்துள்ளன.

* சகல மக்களும் நியாய விலைகளில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைதல்வேண்டும். (கணினி மட்டுமன்றி, இணையத்தள தொடர்புகள், கைத்தொலைபேசி மற்றும் செய்மதித் தொடர்புகள் அனைத்தும் மலிவாக கிடைக்கப்பெறல்வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.)
* நாட்டின் ஒவ்வொரு வீடும் தகவுல் தொலைத்தொடர்பு சாதனக் கருவிகளினால் முழுமைப்பட்டிருத்தல் வேண்டும். கணினி, தொலைக்காட்சி, தொலைபேசி மட்டுமன்றி அவற்றுடன் தொடர்புபட்ட சிறிய இணைப்புக்களும் ஒவ்வொரு வீடுகளிலும் இருத்தல் வேண்டும்.
* ஒவ்வொரு பிரஜையும் டிஜிட்டல் உபகரணங்களைப் பாவித்தல்வேண்டும். அதில் லெப்டொப், பீடீஏ மற்றும் GPRS வசதிகள் கொண்டவை உள்ளடங்கும்.
* சகல மக்களும் 'புரோட்பேன்ட்' இன்டர்நெட் தொடர்புகளின் பயன்களைப் பெறுதல் வேண்டும்.

இவ்வாறு அனைத்து டிஜிட்டல் சுகபோகங்களையும் அனுபவிக்கின்ற மக்கள் 'டிஜிட்டல் அதிர்ஷ்டசாலிகள்' என்றே கருதப்படுகின்றனர். இவ்வாறே, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட நாட்டிலுள்ள அனைத்து மக்களும் இந்த டிஜிட்டல் அதிர்ஷ்டத்தை அனுபவிக்கின்றனர் என்றால் அந்த நாடும்கூட டிஜிட்டல் அதிர்ஷ்டம் கொண்ட நாடுகளின் பட்டியலுக்குள் அடங்கிவிடும்.

எனவே, மேற்குறித்த அறிவுறுத்தல்கள் சிறந்தவோர் பார்வை என்று உலக நாடுகள் வரவேற்றுள்ளன. இந்த வளர்ச்சிப் பாதையில் நாடு முன்னேறுவதற்கு அந்நாட்டின் இளைய தலைமுறையின் பங்களிப்பு அத்தியாவசியமாகும். அதன்படி, இன்றைய மாணவப் பருவத்தினர் தகவல் தொலைத்தொடர்புத் துறையில் மேலும் வளர்ச்சி காண்பதற்கு, ஐ.நாவின் மேற்குறித்த அறிவுறுத்தல்களின் படி நாடுகள் தன்னிறைவு கண்டால் அனைவருமே டிஜிட்டல் அதிர்ஷ்டசாலிகள்தான்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010,ஜூலை மாதம் 07 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday July 07, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org